TO SHARE THE LIGHT

# தீபகச் சுடர்

ஆகஸ்ட் 2026

தீபம் 15 சுடர் 03

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



தீபகத்திலிருந்து **இறையாசீர்**

அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,



## செயற்கை நுண்ணறிவின் காலத்தில்

# மனிதராக நிலைத்திருப்போம்

அன்பிற்கினிய வாசகர்களே,

செயற்கை நுண்ணறிவு நாம் கற்கும், தொடர்புகொள்ளும், பணியாற்றும் மற்றும் முடிவெடுக்கும் முறைகளை வேகமாக மாற்றி வருகின்றது. திருத்தந்தை பதினான்காம் லியோ தனது முதல் சுற்றுமடலான "Magnifica Humanitas" "மகத்தான மானுடம்" வழியாக, தொழில்நுட்பம் நமது எதிரியும் அல்ல; மீட்பரும் அல்ல என்பதை நினைவூட்டுகின்றார். அது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு கருவி. எனவே, அது எப்போதும் மனித மாண்பு, பொதுநலம் மற்றும் குறிப்பாக ஏழைகள், எளியோர், நலிவுற்றோர் ஆகியோரின் முன்னேற்றத்திற்குப் பணியாற்ற வேண்டும்.

செயற்கை நுண்ணறிவால் மனித அறிவை ஓரளவு பின்பற்ற முடியும்; ஆனால் மனச்சாட்சி, இரக்கம், அறப்பொறுப்பு, அன்பு மற்றும் ஆன்மிக உணர்வு ஆகியவற்றைப் பெற முடியாது. ஓர் இயந்திரம் தகவலை வழங்கலாம்; ஆனால் பெற்றோரின் ஞானத்தையும், ஆசிரியரின் உடனிருப்பையும், நண்பரின் உறவையும், இறைவனின் அன்புப் பிரசன்னத்தையும் மாற்ற முடியாது. ஆகவே, வேகமும் திறனும் மட்டுமே

உண்மையான முன்னேற்றத்தின் அளவுகோல்கள் அல்ல. தொழில்நுட்பம் உண்மை, நீதி, சகோதரத்துவம், அமைதி மற்றும் முழுமையான மனித வளர்ச்சியை ஊக்குவித்தல் என்பதே அதன் உண்மையான அளவுகோலாகும்.

இச்செய்தி பெற்றோர், ஆசிரியர்கள், மறைக்கல்வியாளர்கள் மற்றும் இளையோருக்கு மிகவும் முக்கியமானது. சிந்திப்பதைத் தவிர்ப்பதற்கோ, மனித உறவுகளை மாற்றுவதற்கோ, பொய்யான செய்திகளைப் பரப்புவதற்கோ, பிறரைத் தவறாக வழிநடத்துவதற்கோ செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தக் கூடாது. மாறாக, கற்றலை ஆழப்படுத்தவும், படைப்பாற்றலை வளர்க்கவும், மனிதகுலத்திற்குச் சேவை செய்யவும் அதைப் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும். நமது குழந்தைகளுக்கு டிஜிட்டல் திறன்களோடு நன்கு உருவாக்கப்பட்ட மனச்சாட்சி, பகுத்தறியும் திறன், இரக்கம் மற்றும் இறைநம்பிக்கையும் தேவை.

திருத்தந்தை நம்மை "பாபேல் கோபுரத்தை உருவாக்குபவர்களாக" அல்ல, "ஒன்றிப்பைக் கட்டி எழுப்புபவர்களாக" வாழ அழைக்கின்றார். நம்பிக்கை மற்றும் மதிப்பீட்டுக் கல்வியாளர்களாகிய நாம், ஒவ்வொரு தொழில்நுட்பக் கருவியும் மனித இதயத்தால் வழிநடத்தப்பட்டு, நற்செய்தியின் ஒளியால் நெறிப்படுத்தப்படுவதை உறுதி செய்வோம். அறிவார்ந்த இயந்திரங்களின் காலத்தில், உண்மை, சுதந்திரம், உறவு, சேவை மற்றும் அன்பில் வளர்ந்து, முழுமையான மனிதர்களாக நிலைத்திருப்பதே நமது மிகப்பெரிய பொறுப்பாகும்.

> **டிஜிட்டல் திறன்களோடு நன்கு உருவாக்கப்பட்ட மனச்சாட்சி, பகுத்தறியும் திறன், இரக்கம் மற்றும் இறைநம்பிக்கையும் தேவை.**

என்றும் அன்புடன்
*அருட்பணி.* **ஜேசுதாஸ்** *ச.ச*
*இயக்குநர் - தீபகம்*

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 01.08.2026 | புனித அல்போன்ஸ் மரிய லிகோரி - திருப்பலி | 06 |
| 08.08.2026 | பொதுக்காலம் 18வது ஞாயிறு - திருப்பலி | 07 |
| 05.08.2026 | புனித மரியாவின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு (பனிமய அன்னை) -திருப்பலி | 09 |
| 06.08.2026 | ஆண்டவரின் தோற்றமாற்றம் விழா - திருப்பலி | 10 |
| 08.08.2026 | புனித தோமினிக் - திருப்பலி | 12 |
| 09.08.2026 | பொதுக்காலம் 19வது ஞாயிறு - திருப்பலி | 13 |
| 15.08.2026 | புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழா - திருப்பலி (இந்தியாவின் பாதுகாவலி மற்றும் சுதந்திரதின நாள்) | 15 |
| 16.08.2026 | பொதுக்காலம் 20வது ஞாயிறு - திருப்பலி | 16 |
| 20.08.2026 | புனித பெர்னார்டு - திருப்பலி | 18 |
| 22.08.2026 | அரசியான புனித கன்னி மரியா - திருப்பலி | 19 |
| 23.08.2026 | பொதுக்காலம் 21வது ஞாயிறு - திருப்பலி | 20 |
| 24.08.2026 | புனித பர்த்தலமேயு திருத்தூதர் விழா - திருப்பலி | 22 |
| 25.08.2026 | புனித மரிய ட்ரொங்காத்தி - திருப்பலி | 23 |
| 26.08.2026 | அருளாளர் செப்பரினோ நமுங்க்குரா -திருப்பலி | 24 |
| 27.08.2026 | புனித மோனிக்கா -திருப்பலி | 26 |
| 29.08.2026 | புனித திருமுழுக்கு யோவானின் பாடுகள் -திருப்பலி | 27 |
| 30.08.2026 | பொதுக்காலத்தின் 22ம் ஞாயிறு -திருப்பலி | 28 |


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...


| | |
|---|---|
| மரியாவின் விண்ணேற்பும் விடுதலையும் | 31 |
| அருளாளர் செப்பரீனோ நமுங்க்குரா வாழ்வு தரும் பாடம் | 34 |
| புனித மோனிக்கா தந்த புனித அகுஸ்தினார் | 37 |
| புனித திருமுழுக்கு யோவான் நேர்மை தவறாத போராளி | 39 |
| திருஅவைச் செய்திகள் | 43 |
| இளமையும் இறைவனும் | 45 |

## பகுதி-1

# வழிபாட்டு வழிக்காட்டி

# புனித அல்போன்ஸ் மரிய லிகோரி

திருப்பலி
01.08.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

புனித அல்போன்ஸ் மரிய லிகோரியின் திருவிழாவைக் கொண்டாடும் நாம் அவரது வாழ்வின் வழியை பின்தொடர முயற்சிப்போம். இவர் இத்தாலி நாட்டில் நேபிள்ஸ் அருகில் மரியநெல்லா என்னும் இடத்தில் 1696ம் ஆண்டு செப்டம்பர் 27ம் நாள் பிறந்தார். ஏழு பிள்ளைகளுள் முதலாவதாக பிறந்த இவர் 16ம் வயதில் சட்டம் படிக்கச் சென்றார். கசடற கற்று புகழ்பெற்ற வழக்குரைஞர் ஆனார். பணியின் இடையே வெறுமையை உணர்ந்தார். தமது 27வது வயதில் துறவற வாழ்வைத் தேர்ந்துக் கொண்டார்.

தந்தையின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் உறுதியுடன் போராடி தந்தையின் சம்மதத்துடன் 1723ல் குருமடத்தில் சேர்ந்த லிகோரி 1726ம் ஆண்டு டிசம்பர் 21 அன்று குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். நேபிள்ஸ் நகரில் 1729ல் மறைப்பணியை ஆரம்பித்தார். அங்கே அவர் கண்ட காட்சி அவருக்கு அதிர்ச்சியளித்தது. மிக மோசமான நிலையில் வாழும் ஏழைகள், எல்லா வகையிலும் கைவிடப்பட்டோர் என அனைவரையும் கண்டார். இவர்களுக்காக பணியாற்ற வேண்டுமென்ற ஊக்கமுள்ள அவரை அருள் சகோதரி மரிய செலஸ்தே கிராஸ்தரோசா என்பவரைச் சந்தித்தார்.

லிகோரி புதிய சபையொன்றை தொடங்க வேண்டுமென்று கடவுள் தனக்கு வெளிப்படுத்தியதாகக் கூறினார். கடவுளின் வெளிப்பாட்டை ஏற்ற லிகோரி 1732ம் ஆண்டு நவம்பர் முதல் நாளன்று இரட்சகர் சபையை நிறுவினார். 1762ம் ஆண்டு ஆயராக திருப்பொழிவு பெற்றார். சிறந்த மறையுரைகளால் மக்களின் மனதை ஈர்த்தார். மேலும் தமது மறையுரைகள், கட்டுரைகள், புத்தகங்கள் அனைத்திலும் நற்கருணைக்கும், அன்னை கன்னி மரியாவுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தார். லிகோரி எழுதிய அறநெறி இறையியல், மரியாவின் புகழ்மாலை, இரட்சண்ய பாதை, கிறிஸ்துவின் உண்மை, மறைவாழ்வு போன்ற நூல்கள் புகழ்பெற்றவையாகும். எளியோருக்குப் பணியாற்ற இறைவன் எல்லோரையும் அழைக்கிறார். நாமும் அவரின் குரலுக்கு செவிமடுப்போம். பேறுபெற்றோராய் வாழ்வோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையின் தலைவராகிய எம் இறைவா, உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அவர்களை உமது அன்பு சீடர்களாக ஏற்று காத்து வழிநடத்தி வருபவரே, இன்றையக் காலத்தில் கிறிஸ்தவம் அழிந்துக்கொண்டு வரும் இவ்வேளையில், உமக்கு முன்மாதிரியாக இருந்து மக்களை உம்மிடம் அழைத்துவர இவர்களுக்குத் தேவையான தூய ஆவியாரின் அருட்கொடைகளைப் பொழிந்து வழிநடத்தும்படி உம்மை மன்றாடுகிறோம்.

2. சமூகத்தில் ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, பிள்ளைகளால் ஓரங்கட்டப்பட்ட பெற்றோர்களையும், பிள்ளைகளையும் உமது கரத்தில் ஒப்படைக்கின்றோம். இவர்களின் மனநிலையை மாற்றி குடும்பங்களில் ஒற்றுமையும், மனஅமைதியும், விட்டுக்கொடுத்து வாழும் நல்லுள்ளம் கொண்டவர்களாக உமது சமூகத்தை கட்டிக்காத்து வழிநடத்தும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆபத்து வேலையில் ஆறுதல் அளிக்கும் இயேசுவே, கடலில் மூழ்கிய பேதுருவுக்கு அன்று கைகொடுத்து தூக்கியதுபோல் துன்ப துயரங்களிலும், எல்லாவிதமான சோதனைகளிலிருந்தும் பலவிதமான இக்கட்டுகளிலிருந்து மக்களை விடுவித்து உமக்கேற்ற பாதையில் நாளும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் அளவுக்கு தங்களை மாற்றிக்கொண்டு வாழ்வில் செயல்பட காத்தருளும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## பொதுக்காலம் 18வது ஞாயிறு

திருப்பலி
02.08.2026

**முன்னுரை**

*திருமதி. லதா சுரேஷ்*

I. *எசா 55:1-3* II. *உரோ. 8:35, 37-39* *மத்.. 14: 13-21*

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, உயிருள்ள ஒவ்வொரு ஜீவராசிகளுக்கும் உணவு மிகவும் முக்கியமானதாக படைத்துள்ளார். ஆனால் இறைவன் தன் சாயலால் படைக்கப்பட்ட மனிதனுக்கு மட்டும் அழியும் அழியா ஆன்ம உணவு என வேறுபடுத்துகிறார். பாலைநிலத்தில் பசியால் வாடியவர்களின் பசியைப் போக்க தினமும் மன்னாவைப் பொழிந்தார். ஆனால் அது மறுநாளே புழுத்து புழுதியில் கொட்டப்பட்டது. அந்த உணவினால் மனிதன் நிறைவு அடையவில்லை. முதலில் உயிர் வாழ உணவுக் கிடைக்காதா என்று எண்ணியவன். நூனவில் சுவைக்கு அடிமையாகி அடுத்து இறைச்சியில்லை என்று புலம்பத் தொடங்கினான். நாம் உலகப் பிரகாரமான வாழ்வுக்கு முக்கியத்துவம் தந்து நாவிற்கு அடிமையாகும்போது அவ்வுணவிற்காக அனைத்தையும் இழக்க நேரிடுகின்றது. ஆழ்ந்த அழிவிலிலிருந்து மீட்க வாழ்வளிக்க வானகத்தந்தை அழியா மன்னாவை நமக்களித்தார். அவ்வாழ்வுதரும் உணவு இயேசுகிறிஸ்துவே, இவரே நம் ஆன்மீக பசியைப் போக்கி முடிவில்லா வாழ்வைத்தரும் வானக உணவு. அவரின் வார்த்தைகள் மனிதர்களுக்கு நிலையான ஆன்மீக அமைதியையும் மீட்பையும் தரவல்லது.

இயேசு கிறிஸ்துவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பே நிலையானது அந்த அன்பில் நாம் நிலைத்திருந்தால் இயற்கையாகவே மண்ணாசையோ, பொன்னாசையோ எவ்வித ஆசைக்கும் நம் மனம்

இடங்கொடுக்காது. இறைவன் பசியாய் இருந்தவர்களை அழைத்து உணவளித்து, இறைவார்த்தை என்னும் பசியைப் போக்கி, இளைப்பாற்றினார். அவர் அளித்த இறைவார்த்தை இறைவாழ்வு மறையுரை அவரைவிட்டு பிரியாமல் அவரோடு தொடர்ந்து நடக்கச் செய்தது. அவர் அளித்த இருவகையான உணவு உடலுக்கும், ஆன்மாவுக்கும் புத்துணர்வை அளித்தது அவர் ஒருவரால் மட்டுமே அளிக்க முடியும். அவ்விருந்தில் பங்குப்பெற வந்திருக்கும் நாம் அவர் தரும் அப்பம் தெய்வீக உணவு, நாம் திருப்பலியில் கேட்கும் வாசகமும், மறையுரைகளும் வாழ்வு தரும் இறைவார்த்தை நம் ஆன்மீகப் பசிக்கு விருந்து என்பதை இங்கு கூடியுள்ள ஒவ்வொருவரும் உணர்ந்து இவ்விருந்தில் பங்குக் கொண்டு அவரில் இரண்டறக் கலந்து வாழ்வோம் என்ற இறைவனில் இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தூய்மையின் திருவுருவே எம் இறைவா, உலகை இறையரசுப் பாதையில் வழிநடத்திச் செல்ல உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம்மை வெறும் கண்களால் காணாமல் அகத்தூய்மையினால் கண்டு இறைச்சித்தத்தை தங்கள் வாழ்நாளின் வேட்கையாக கொண்டு வாழ்ந்திட தேவையான ஆசீரையளித்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான எம் இறைவா, உயிரினங்களின் கண்கள் உம்மை நோக்கி பார்த்தால் உம் கைகளைத் திறந்து உணவளிப்பவரே, இன்று உலகில் பல்வேறு நாடுகளில் போர், கலவரம், இயற்கைச் பேரழிவினால் பசி, பஞ்சம், வறுமை போன்றவற்றினால் மக்கள் பெரிதும் அவதியுற்று உமக்கெதிரான முடிவினைத் தேர்வு செய்து தங்களின் வாழ்வை காலத்திற்கேற்ப மாற்றிக் கொள்கிறார்கள். இந்நிலை மாறி உம்மை பின்பற்றி வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் தங்களின் சுயநலத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டோம் என்ற சிந்தனையை மறந்து மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், அவர்களின் நிறை குறைகளை நிறைவேற்றவும், தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டோம் என்பதை நினைவில் கொண்டு செயல்பட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. மன்னிப்பின் மாபரனே எம் இறைவா, இந்திய நாட்டில் வாழும் எம் இளைஞர்கள், இளம் பெண்கள், குழந்தைகளை உம் பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களின் எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு உமக்கேற்ற பாதையில் நாளும் வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# புனித மரியாவின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு (பனிமய அன்னை)

திருப்பலி
05.08.2026

## முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று நாம் சிறப்பிக்கும் புனித மரியாவின் பெருந்கோவில் நேர்ந்தளிப்பு லிபேரியுஸ் திருத்தந்தையாக இருந்த காலத்தில் (352-366) உரோமையில் வாழ்ந்த யோவான் என்பவர் குழந்தை இல்லாமல் இருந்தார். தனக்கான வாரிசு வேண்டி இவரும், இவரின் மனைவியும் அன்னை மரியிடம் இடைவிடாது செபித்தார்கள். குழந்தை வரம் தந்தால் தங்கள் சொத்துக்களை அன்னை கன்னிமரியின் பெயர் விளங்க பயன்படுத்துவதாக நேர்ச்சை வைத்தார்கள். ஆகஸ்டு மாதம் கடுமையான வெயில் அடிக்கும் மாதம். ஆனால் அன்னையின் புதுமையால் திரு. யோவான் அந்த எஸ்கலின் மலையில் எங்கு திருத்தலம் எழுப்ப வேண்டுமோ அந்த இடத்தில் மட்டும் அன்னை பனிமழை பொழிய செய்து திரு. யோவானுக்கு அடையாளம் காட்டினார். திரு. யோவான் அந்த அதிசயத்தை திருத்தந்தையிடம் கூறி, அதனைப் பார்த்த திருத்தந்தையும் அன்னையின் அற்புதத்தினை ஏற்றார்.

கி.பி. 1582ம் ஆண்டு இயேசு சபை குருக்கள் கூடி சிறிய ஆலயமாகக் கட்டினர். 1713ம் ஆண்டு தற்போதுள்ள புதிய ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு தூய்மைப்படுத்தப்பட்டது. 427 ஆண்டு வரலாற்றைக் கொண்டது இந்த தேவாலயம். சிற்றாலயமாக இருந்த இத்தேவாலயம் 1982ம் ஆண்டு பேராலயமாக உயர்த்தப்பட்டது. இப்பேராலயத்தில் வீற்றிருக்கும் புனித பனிமய மாதா சொரூபம் 1555ம் ஆண்டு ஜூன் 9ம் தேதி "சாந்தலேனா" என்ற கப்பல்மூலம் தூத்துக்குடி வந்தது சிறப்பு அம்சமாகும். இப்பேராலயத்தில் இயேசு சிலுவையில் அறைந்த மரச்சிலுவையின் ஒரு துண்டு விசித்திரமாக அலங்கரிக்கப்பட்ட பொன்மயமான பாத்திரத்தில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. அன்னையின் விழாக் காலங்களில் நடக்கும் பகல் ஆராதனையின் போது இதை வைத்து ஆசீர் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. அன்னையின் சாட்சியையும், வேண்டுதலையும் திருத்தந்தை லிபேரியுசிடம் தெரிவித்தார். அதனை ஏற்ற திருத்தந்தை அன்னைக்கு ஓர் பேராலயம் எழுப்ப அனுமதியளித்தார். 431ம் ஆண்டு எபேசு நகரில் திருச்சங்கம் கூடியது. அச்சங்கம் அன்னை கன்னிமரியாவை "இறைவனின் தாய" என்று அறிக்கையிட்டது. இதனை நினைவு கூறும் விதமாக திருத்தந்தை சிக்ஸ்துஸ் அப்பேராலயத்தை புதுப்பித்து அன்னை மரியாவுக்கு அர்ப்பணித்தார். இறைவனின் தாயாம் அன்னை மரியாவிடம் நம் குடும்பத்தையும் ஆசீர்வதிக்கும்படி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. உம்மையே எமக்காக கையளித்த இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும்

நீர் பகிர்ந்த சான்றுக்கேற்ப இரக்கத்தின் ஆண்டில் உறுதியோடு வாழ தேவையான அருளைப்பொழிய வேண்டுமென்று புனித கன்னிமரியா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. நிலைவாழ்வை பொழியும் வள்ளலே இறைவா, உம்மால் வாழ்வளிக்கப்பட்ட நாங்கள் அனைவரும் நீர் ஒருவரே எங்கள் தஞ்சம் என்பதை உணர்ந்து உம்மோடு இணைந்திருப்பதே எங்கள் வாழ்வின் இலக்காக கொண்டு உம்முடைய வழிகாட்டுதலின்படி வாழ்ந்து உம்மீது நம்பிக்கைக்கொண்டு நிலைத்து நிற்கின்ற மக்களாக வாழ வரமருள புனித கன்னிமரியா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் இறைவா, இங்கு கூடியுள்ள நாங்கள் அனைவரும் அன்னை மரியாளைப்போன்று கிறிஸ்துவுக்கு ஏற்ற பிள்ளைகளாக வாழ்ந்து அதன்மூலம் கிறிஸ்துவை மகிமைப்படுத்த வேண்டும் என்று புனித கன்னிமரியா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

4. இரக்கமே உருவான இறைவா, குடிபழக்கம், போதை, காமவெறி, கொலை, கொள்ளை போன்ற தீய பழக்கங்கள் உள்ளவர்களை உமது குணமாக்கும் வல்லமையால் ஆட்கொண்டு அவர்களை தீய பழக்கத்திலிருந்து முற்றிலும் குணமாக்கி முழுமையான விடுதலையைப் பெற்று நலமோடு வாழ அருள்புரிய வேண்டுமென்று புனித கன்னி மரியா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.



# ஆண்டவரின் தோற்றமாற்றம் விழா

**திருப்பலி**
**06.08.2026**

## முன்னுரை

*திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *தானி. 7: 9-10, 13-14* II. *2பேதுரு 1: 16-19* *மத். 17: 1-9*

அன்பிற்கினிய கிறிஸ்துவில் சகோதரிகளே, சகோதரர்களே, இன்று திருஅவை ஆண்டவரின் தோற்றமாற்ற விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறது. இந்த விழா இயேசு உண்மையான இறைமகன் என்பதையும், சிலுவையின் துன்பத்திற்குப்பின் உயிர்த்தெழுதலின் மகிமை காத்திருக்கிறது என்பதையும் நமக்கு நினைவூட்டுகிறது. தோற்றமாற்றம் என்பது இயேசுவின் மகிமையை மட்டுமல்ல, அவரைப் பின்பற்றும் ஒவ்வொரு நம்பிக்கையின் வாழ்க்கையும் இறையருளால் மாற்றம் பெறவேண்டுமென்ற அழைப்பாகும்.

இறைவனுடைய மகிமையை, மாட்சியை எடுத்துரைப்பதாக முதல் வாசகம் அமைந்திருக்கிறது. இறைவாக்கினர் தானியேலைத் தான் கண்ட காட்சியை எடுத்துரைக்கிறார். அதில் விண்ணகத்தில் இறைத்தந்தை மாட்சியோடு அமர்ந்திருப்பதை விவரிக்கிறார். அவரது அரசு அழிந்து போகாது என்பதை உறுதியாகக் கூறுகிறார். இரண்டாவது வாசகத்தில் திருத்தூதர் பேதுரு,

ஆண்டவரின் தோற்றமாற்ற நிகழ்வைத் தம் கண்களால் கண்டதை சாட்சியாக அறிவிப்பதாகக் கூறுகிறார். "இவரே என் அன்பார்ந்த மகன், இவரிடம் நான் பூரிப்படைகிறேன்" என்ற தந்தையின் குரலை அவர் கேட்டார். இந்த அனுபவம் அவரது நம்பிக்கையை உறுதிப்படுத்தியது. நாமும் இறைவார்த்தையை இருளில் ஒளிரும் விளக்காக ஏற்று, கிறிஸ்துவின் ஒளியில் நடந்து நம் வாழ்க்கையை இறைவனுக்குப் பிரியமானதாய் மாற்ற அழைக்கப்பட்டிருக்கிறோம்.

நற்செய்தியில் இயேசு தமது இறைத்தன்மையின் மகிமையை தமது மூன்று சீடர்களான புனித பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோருக்கு வெளிப்படுத்திய நிகழ்வை நினைவுக் கூறுகிறது. இதனுடைய ஆன்மீகப் பொருள், இயேசு உண்மையான இறைவனும் மனிதனும் என்பதை வெளிப்படுத்துகிறது. உயிர்த்தெழுதலின் மகிமைக்கு முன்னோட்டமாக அமைந்தது. கிறிஸ்தவர்கள் தங்களின் தூய வாழ்வால் மகிமையில் பங்குக்கொள்ள அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நினைவூட்டுகிறது. நமக்கு இறைவன் உணர்த்துவது, துன்பங்களுக்குப் பின்னர் மகிமை காத்திருக்கிறது என்ற நம்பிக்கையில் உறுதியாக இருக்க வேண்டும்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. "அஞ்சாதீர்கள்" என்று சொன்ன ஆண்டவரே, உலகெங்கும் உள்ள திருஅவை கிறிஸ்துவின் ஒளியை உலகிற்கு எடுத்துரைக்கின்ற சாட்சியாக இருந்து, அனைவரையும் இறைவனின் மகிமையை நோக்கி வழிநடத்த அருள்பெற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. தலைவர்களுக்கெல்லாம் தலைவராகிய எம் இறைவா, உலக நாடுகளின் தலைவர்கள் அமைதி, நீதி, சகோதரத்துவம் ஆகியவற்றை நிலைநாட்ட, ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் நலனுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் மனதை அவர்கள் பெற எல்லாம் வல்ல இறைவனின் அருள்வரங்களை கொடையாகப் பெற்று சிறப்பாக பணியாற்ற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் சிகரமே எம் இறைவா, தோற்ற மாற்ற மலையில் வெளிப்பட்ட கிறிஸ்துவின் மகிமை துன்புறுவோர், நோயாளிகள் மற்றும் மனவேதனையில் இருப்போருக்கு வாழ்வில் நம்பிக்கையின் ஒளியைப் பரப்பி, ஆறுதலும் குணமளிப்பும் வழங்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. "இவர் என் அன்பார்ந்த மைந்தர்" என தந்தையால் கூறப்பட்ட இயேசுவே நாங்கள் தினமும் இறைவார்த்தையைக் கேட்டு, இயேசுவின் முகஒளியை எங்கள் வாழ்வில் பிரதிபலித்து அன்பும் தூய்மையும் நிறைந்த கிறிஸ்தவ வாழ்வை நடத்தும் அருளைப்பெற வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# புனித தோமினிக்

திருப்பலி
08.08.2026

## முன்னுரை

திரு. ஜான் போஸ்கோ

மனித முன்னேற்றம் மனிதருக்கு மிக நன்மையான ஒன்றுதான் என்றாலும் தீமைக்கான ஒரு பெரும் தூண்டுதலும் அதில் இருக்கக் கூடும். இந்த உண்மையை அறியாததினால் இன்றைய வாழ்க்கைச் சூழல் நமக்கு அவநம்பிக்கையை அளிக்கிறது. அன்றாட வாழ்க்கையில் சந்திக்கின்ற சவால்களைச் சமாளிக்க முடியாமல் வாழ்க்கையே தோற்றுப்போனது போன்ற உணர்வு நம்மை ஆட்டிப்படைக்கின்றது. ஏமாற்றத்தையே கண்கள் காட்சிகளாகக் காண்கின்றன. அதற்குக் காரணம் நம்முடைய பலவீனமான மனநிலையும், சிந்தனைகளும், செயல்களும் ஆகும். தீயவன் மனிதருடைய பலவீனத்தைப் பயன்படுத்தி மக்கள் மனதில் அவநம்பிக்கையை ஆழமாக விதைக்கப்படுகிறது. இந்த அவல நிலையிலிருந்து விடுபட வேண்டுமென்றால் மனிதர்கள் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும்.

தீமைக்கு எதிராக நிகழ்கின்ற கடினப் போராட்டம் மனிதரது வரலாறு முழுவதையுமே ஊடுருவியுள்ளது. உலகின் தொடக்கத்திலேயே மூண்ட இப்போர், ஆண்டவர் கூறியுள்ளதுபோல், இறுதி நாள்வரை தொடர்ந்து நீடிக்கும். இப்போரிலே ஈடுபட்டுள்ள மனிதர் தூய ஆவியாரின் உதவியைத் தேட வேண்டும். ஆவியானவரின் அருட்கொடைகளைப் பெற்று அவருடைய வல்லமையில் நிலைத்திருந்து இவ்வுலகில் இருக்கும் தீமைகளுக்கு எதிராகத் துணிந்து போராட வேண்டும். அதற்கு அவசியமானது ‘இறைநம்பிக்கை’. இதைத்தான் இன்றைய வாசகங்கள் நமக்கு நினைவூட்டுகின்றன. கடவுள் அனைத்தையும் படைத்து நல்லதெனக் கண்டதுபோல் நாம் வாழும் இவ்வுலகைப் புதுப்படைப்பாக மாற்றிட நம்மையே அர்ப்பணிப்போம். இறைவார்த்தையின் ஒளியில் நம்பிக்கையோடு இணைந்து பயணிப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பிற்கு அடைக்கலமானவரே, உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, கர்தினால்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களின் பணிகள் என்னவென்பதை நீர் குறித்து வைத்து தேர்ந்தெடுத்திருக்கின்றீர். அப்பணியில் ஏற்படும் தொய்வினை தகர்த்தெறிந்து சிறப்பான முறையில் அவற்றை செயல்படுத்த இவர்களுக்குத் தேவையான நல்லுள்ள உடல் சுகமளித்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. எங்களைப் படைத்து பராமரிப்பவரே, நீர் படைத்த அனைத்தும் நல்லதெனக் கண்டு எங்களுக்கு பயனுள்ள விதத்தில் படைத்தீர் அப்படைப்பை

இன்றைய அறிவியல் கலாச்சாரத்தினால் அவற்றை பலவிதமான வழிகளில் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலைமாறி இயற்கையோடு ஒத்துழைக்கும் நல்லுள்ளம் கொண்டவர்களாக நாங்கள் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. இயற்கையின் இருப்பிடமே, காலச்சூழலில் சிக்கித்தவிக்கும் உம் பிள்ளைகளை கண்ணோக்கும். அவரவருக்குத் தேவையான அனைத்து பொருளுதவிகளும், செல்வங்களும் கிடைக்கப்பெற்று போதுமென்ற மனதோடு பிறரையும் அன்போடும், பாசத்தோடும் சகோதர உறவோடும் பாவித்து, தாய் தந்தையரை மதித்து உமது வழியில் நாளும் நடந்திட தூய ஆவியாரின் அருட்கொடைகளை நிறைவாய்ப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



## பொதுக்காலம் 19வது ஞாயிறு

திருப்பலி
09.08.2026

### முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

I. *1 அரசர்கள் 19:9, 11-13* II. *உரோ.9:1-5* *மத். 14:22-23*

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்றைய தினம் நாம் பொதுக்காலத்தின் 19ம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க ஒன்றுக்கூடியுள்ளோம். இன்றைய முதல் வாசகம் எலியா இறைவாக்கினர் கடவுளின் ஒரேபு மலையில் உள்ள குகையில் இரவைக் கழித்தபோது, ஆண்டவரின் குரல்கேட்டு வெளியேவர முயல்கையில் பெருங்காற்றும் அதன் வீச்சு மலைகளை பிளந்து பாறைகளை சிதறடித்தபோதும் அதனால் ஏற்பட்ட தீயின் பதட்டத்தினால் குழப்பமடைந்த போதும், ஆண்டவரின் குரலுக்கு பணிகிறார். இரண்டாம் வாசகமான உரோமையிலும், புனித பவுல் கிறிஸ்துவை சார்ந்திருக்கும் நிலையில் தான் சொல்வது அத்தனையும் உண்மை என்றும், தூய ஆவி அதற்கு சாட்சியென்றும் இஸ்ரவேல் மக்களை தம் மக்களாக ஏற்றுக்கொண்ட ஆண்டவர் அவர்களிடமே வாக்குறுதிகளையும் அளித்திருந்திருந்ததாகவும் குல முதுவர்கள் வழிவந்தவர்கள் அவர்கள் என்றும் மனிதர் என்னும் முறையில் அவர்களிடமிருந்தே தோன்றினார் என்றும் போற்றி கூறுகிறார்.

மத்தேயு தம் நற்செய்தியில் கூறும் கருத்து, அதாவது, இயேசு மக்களை அனுப்பிவிட்டு சீடர்களையும் படகிலேறி செல்லுங்கள் என்று கூறி தான் மட்டும் இறைவேண்டல் செய்ய அங்கிருந்த மலையில் ஏறியபோது படகும் வெகுதொலைவில் சென்று விட்டது. அச்சமயம் காற்றின் வேகத்தால் படகும் அலைக்கழிக்க, இயேசு கடல்மீது நடந்து அவர்களிடம் வரும்போது, அவரைக் கண்டு பயந்து அலறியபோது, ஆண்டவர் அவர்களிடம் அஞ்சாதீர்கள் என்று கூற உடன் பேதுரு நானும் உம்மோடு கடல்மீது நடந்துவர ஆணையிடும் என்றதும், ஆண்டவரும் "வா" என்றார். பேதுருவும் நடக்க, அச்சமயம் பெருங்காற்று வீச பேதுரு நடுங்கி ஆண்டவரே என்னைக் காப்பாற்றும் என்று

கூற, நம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய், என்று கூறி, படகில் வரவும் காற்று அமைதியாயிற்று. "ஆண்டவரே நீர் இறைமகன்" என்று சீடர்கள் போற்றி வணங்குகின்றனர்.

ஆகவே எப்போதெல்லாம் நாம் துன்பங்களிலும், வேதனைகளிலும் இருந்தாலும் ஆண்டவர் நம்மை கைவிடமாட்டார் என்று உறுதியுடன் இருக்க இந்நிகழ்வு நம்மை பன்படுத்துகிறது. "நம்பினோர் கைவிடார்" என்ற வார்த்தைக்கு இணங்க எலியாவும், புனித பவுலும், புனித பேதுருவும் சாட்சிகளாக இருக்கின்றனர் என்ற நம்பிக்கையோடு, இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் நாயகரே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட்பணியாளர்கள் துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரும் திருஅவையை வழிநடத்த தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற எண்ணத்தோடு செயல்பட வேண்டுமென்றும், அவரின் மந்தையை வழிநடத்திச்செல்ல ஆண்டவர் எப்போதும் நம்மோடிருப்பார் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடும், உறுதியோடும் மனந்தளராமல் தம் பணிகளை நிறைவேற்றத் தேவையான அருள்வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. "துணிவோடிருங்கள், நான்தான், அஞ்சாதீர்கள்" என்றுரைத்த இறைவா, சமூகத்தில் யாருமற்ற அனாதைகள், கைவிடப்பட்ட விதவைகள், முதியவர்கள், நோயாளிகள் மற்றும் நோயினாலும், துன்பங்களினாலும், யாரிடமும் சொல்லாமல் தனக்குத்தானே தண்டனையை வருவித்துக் கொள்பவர்கள் இவர்களை இனம் கண்டு அவர்கள்மீது அன்பும் அக்கறையும் கொண்டு உதவும் நல் மனம் கொண்டவர்களாக நாங்கள் வாழ உமது தூய ஆவியின் அருட்கொடைகளை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

3. தேவைகளை அறிந்து எம்மை வாழ்விப்பவரே, நாட்டையாளும் தலைவர்கள் தங்களின் சுயநலனைக் கருத்தில் கொள்ளாமல் தாங்கள் மக்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம் என்ற மனநிலையை கொண்டு செயல்படவும், தாராள உள்ளத்தோடு மக்களுக்கு தேவையான அனைத்து திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. கண்ணின் இமைப்போல் எங்களை பாதுகாப்பவரே, அறிவியல் தொழில் நுட்பங்களால் சமூக ஊடகங்களினால் சீரழியும் இன்றைய இளையோரின் வாழ்வை உமது பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் தங்களின் மனம்போன போக்கில் வாழ்வைப்பற்றிக் கவலைக்கொள்ளாமல் வாழ்வதை

உணர்த்தி, "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்" என்பதை இவர்கள் உணர்ந்து தம் வாழ்வை இறைவனின் திட்டத்திற்கேற்ப மாற்றிக்கொண்டு வாழும் நல்லுள்ளத்தை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழா (இந்தியாவின் பாதுகாவலி மற்றும் சுதந்திரதின நாள்)

திருப்பலி 15.08.2026

### முன்னுரை

*திரு.T. சாம்சன்*

இறையேசுவின் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, இன்று அன்னையின் விண்ணேற்பு மற்றும் நாட்டின் 79வது சுதந்திர தினவிழாவைக் கொண்டாடுகின்ற உங்கள் அனைவருக்கும் அன்னை மரியாளின் விண்ணேற்பு பெருவிழா வாழ்த்துக்களையும், சுதந்திர தினவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னை மரியாள் சாதாரண தாயைவிட தனது பிள்ளைகளிடம் முழுமையான அக்கறையோடும், கண்மணிபோல் கருத்தாய் பாதுகாப்பவள். இன்று நம் அன்னைக்கு விழா எடுப்பது மிகவும் பொருத்தமானதாகும். அன்னையின் பெருமை கோபுரம்போல் உயர்ந்து, வானம்போல் பரந்து கடல்போல் ஆழ்ந்தது. அத்தகைய அன்னையின் அன்பை எடுத்துரைக்க உலகில் எந்த மொழியிலும் வார்த்தைகள் கிடையாது. அன்னையின் பணிவுதான் அன்னையை இறைவனின் தாயாகவும் திருஅவையின் தாயாகவும் கடவுள் நமக்கு தந்திருக்கிறார். இத்தகைய சிறப்புமிக்க அன்னை கடவுளின் திருவுளத்தை ஏற்று நடந்தார். திருஅவைக்குமுன் அடையாளமாக விளங்கினார். திருஅவையும் அன்னையின் இறைத்திட்டத்தை இவ்வுலகில் நிறைவேற்றும் கருவியாக செயல்பட வேண்டும். அப்போதுதான் இது ஒரு சாட்சிய வாழ்வாக மாறும்.

அதுபோலவே இந்தியா என் தாய் நாடு என்பதிலே இந்தியர்கள் நாம் பெருமைக் கொள்கிறோம். அதனால்தான் பெற்ற சுதந்திரத்தை பேணிகாக்க வேண்டிய கடமை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு என்கிறோம். நாம் சுதந்திரமாக சுவாசிக்க காரணமாக இருந்த ஒவ்வொரு தேசத்தலைவர்களையும் அவர்கள் நமக்காக தனது உயிரை தியாகம் செய்து பாடுபட்டு இரத்தம் சிந்தி சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தார்கள். அவர்களையும் அவரது குடும்பத்தில் உள்ளவர்களையும் நாம் என்றென்றும் நினைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நாட்டுக்காக உழைக்கின்ற தலைவர்கள் உண்மையுள்ளவர்களாக மக்களை சுரண்டாமல் மனிதத் தன்மையோடு மனிதர்களை மதித்து வாழ வேண்டும். இது சாத்தியமாவது நம் கையில் தான் உள்ளது. அதுபோலவே நமது ஆன்மீக வாழ்க்கையும் அமைய வேண்டும். கடவுளை திருப்திப்படுத்த கடவுளுக்கே காணிக்கை செலுத்திவிட்டு மனிதர்களை மதிக்காமல் இருந்து விடக்கூடாது. அன்னை மரியாளைப்போல தாழ்ச்சிமிக்கவர்களாய் பிறரை

மதிக்க உதவி செய்ய, இரக்கம் காட்ட, துன்ப நேரத்தில் தோள்கொடுக்க அதன்வழியாக கடவுளை அறிந்துக்கொள்ளும் மனம் கொண்டவர்களாக வாழ வரமருள வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு நம் அன்னை மரியாளிடம் வேண்டுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. படைப்பிற்கெல்லாம் பரம்பொருளே எம் இறைவா, உமது பிரதிநிதிகளாகிய எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரையும் நீர் உமது திருக்கரத்தால் ஆசீர்வதித்து மக்கள் நலனுக்காக அவர்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளும் நல்ல முறையில் அமையவும், மக்களோடு உள்ள உறவு பலப்படவும் வரமருள வெண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அரசருக்கெல்லாம் அரசரே எம் இறைவா, உலக அமைதிக்காக உம்மிடம் மன்றாடுகிறோம். உலகில் போர் வன்முறை நீங்கி அமைதி நிலவவும், பொருளாதார நெருக்கடி நீங்கி, வெப்பம் தணிந்து இயல்புநிலை மாறவும், நோய்த்தொற்றுகள் பரவாமல் உம் மக்களைக் காக்கப்பட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வழிகாட்டும் தெய்வமே எம் இறைவா, இன்றைய இளைஞர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி உறவுமுறைகள் தெரியாமல் தான் செய்வது தவறா? சரியா என்று புரியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு, தவறான பாதையில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு வாழும் உம் குழந்தைகளை கண்ணோக்கும், இவர்களின் வாழ்க்கைப் பாதையை மாற்றி உமக்கேற்ற பிள்ளைகளாக, வாழ்வில் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் மக்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 20வது ஞாயிறு

திருப்பலி
16.08.2026

## முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *எசா. 56: 1, 6-7* II. *உரோ. 11: 13-15, 29-32* *மத். 15: 21-28*

பொதுக்காலத்தின் 20ம் ஞாயிறு திருப்பலிக்கு வருகைத் தந்திருக்கும் நம்பிக்கையாளர்களை அன்போடு வரவேற்கிறோம். இறைவனின் வார்த்தை மனிதர்களிடையே பாகுபாடு பாராமல் அனைவரையும் நம் அன்பின் விருந்திற்கு அழைக்கும் இறைவனின் எல்லையற்ற இரக்கத்தையும், நம்பிக்கையுடன் அவரை அணுகுவோரின் நம்பிக்கைக்கும் அவர் அளிக்கும் அருளையும் நமக்கு எடுத்துரைக்கிறது. இறைவனின் மீட்பு எல்லா மக்களுக்கும் உரியது என்பதை இறைவாக்கினர் எசாயா எடுத்துரைக்கிறார். ஆண்டவரின் உடன்படிக்கையில் நிலைத்திருக்கும் பிற இனத்தவரையும் இறைவன் தனது

இல்லத்தில் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வார் என்று அறிவிக்கிறார். இறைவனின் அன்பும் இரட்சிப்பும் அனைவருக்கும் உரியது என்பதை உணர்ந்து இந்த வாசகத்திற்கு கவனமுடன் செவிமடுப்போம். இறைவன் அளிக்கும் அருளும் அழைப்பும் பற்றி புனித பவுல் எடுத்துரைக்கிறார். யூதர்களுக்கும் பிற இனத்தாருக்கும் ஒரே இரக்கத்தை வழங்கி அனைவரையும் மீட்பின் வழிக்கு கொண்டு வருவதே இறைவனின் திட்டம் என்பதை உணர்த்துகிறார்.

நற்செய்தியில் கனானிய பெண்ணின் ஆழ்ந்த நம்பிக்கையையும் விடாமுயற்சியுள்ள செபமும் இயேசுவின் பாராட்டைப் பெறுகிறது. இனம், மொழி, எல்லைகளைத்தாண்டி நம்பிக்கையுடன் அவரை நாடுபவர்களுக்கு இறைவன் அருள் வழங்குகிறார் என்பதை இந்த நற்செய்தி வெளிப்படுத்துகிறது. நம்பிக்கையை உறுதிப்படுத்தும் விதமாக இனம், மொழி, சமூக வேறுபாடுகளைக் கடந்து அனைவரையும் அன்போடு ஏற்றுக்கொள்ளும் இதயத்தைப் பெற இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. உம்மிடம் பற்றுக்கொள்ளும் யாவரையும் பாதுகாக்கின்ற அற்புதரே, திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் இறைமக்கள் அனைவரும் தங்களிடையே எவ்விதப் பாகுபாடுகளையும் பாராமல் அனைவரையும் அன்போடு அரவணைத்து, மக்களின் மனித மாண்பைப் பாதுகாக்கும் பணியில் உறுதியுடன் செயல்பட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. உலகையாளும் உன்னத தந்தையே, உலக நாடுகளின் தலைவர்கள் நீதியுடனும் இரக்கத்துடனும் ஆட்சி செய்து அமைதி, ஒற்றுமை, மனித மாண்பைப் பாதுக்காக்கும் பணியில் உறுதியுடன் செயல்படவும், மக்களின் தேவைகளை உணர்ந்து தமது கடமையை செய்ய அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. "அம்மா உமது நம்பிக்கை பெரிது, நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்" என்று கூறிய ஆண்டவரே, கானானியப் பெண்ணின் உறுதியான நம்பிக்கையைப்போல நாங்களும் இடைவிடாது செபித்து இறைவனின் திருவுளத்தில் நிலைத்திருந்து, அனைவரிடமும் அன்பும், இரக்கமும் காட்டும் மனதைப்பெற அருள்புரிய வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. மருத்துவருக்கெல்லாம் மருத்துவரான எம் தந்தையே, அன்று கானானிய பெண்ணின் மகளைக் குணப்படுத்தியதுபோல இன்று பலவிதமான நோயினால் அவதியுறுவோரையும், மனக்கவலைகளால் சோர்ந்துப்போய் உமக்கெதிரான வழியில் செல்வோரையும் நீர் கண்ணோக்கும். அவர்களுக்கு நீரே உற்றத்துணையாய் இருந்து நல்வழியில் நாளும் நடந்திட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# புனித பெர்னார்டு

திருப்பலி
20.08.2026

## முன்னுரை

*திரு. விக்டர்*

இன்று புனித பெர்னார்து விழாவை திருஅவை கொண்டாடி மகிழ்கிறது. நாமும் இத்திருப்பலி வழியாக இவ்விழாவை சிறப்பித்து அதன் அர்த்தத்தை புரிந்து அதன்படி வாழுவோம். இவரின் காலம் கி.பி. 1091-1153 ஆகும். இளைஞனாக இருந்த இவர் பெரிய பிரபு குடும்பத்தில் பிறந்தாலும் தனது படிப்புகளை முடித்த நேரத்தில் உலக செல்வாக்கு அனைத்தையும் துறந்து, புனித பெனடிக்ட் தொடங்கிய துறவு மடத்தில் சேர்ந்தார். இதுவே சிற்றோ நகரில் நிறுவப்பட்ட முதல் துறவு மடம். இங்கு கடுமையான ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்பட்டது. இவர் மட்டுமல்ல, இவரோடு உடன்பிறந்த நால்வரும் அவருடைய மாமனும் இங்கு சேர்ந்தனர். பல ஆண்டுகளாக இம்மடத்தில் யாரும் வராத நிலையில் இவருடன் மேலும் 31 இளைஞர்கள் சேர்ந்து இம்மடத்தின் அப்போது அதிபதியாக இருந்த புனித ஸ்டீபனுக்கு அளவில்லாத ஆனந்தம் அளித்தது.

பெர்னார்து தனிமை, தவம், செபம் இவற்றை எவ்வளவு அன்பு செய்தாரோ அந்தளவுக்கு அவருடைய ஆன்மீகத் தொண்டு வெளிஉலகிற்கு தேவைப்பட்டது. அடுத்தடுத்து வந்த திருத்தந்தையர்கள் இவரின் ஆன்மீக ஆலோசனையை இடைவிடாது நாடினர். கி.பி. 12ம் நூற்றாண்டின் மாமனிதர் என்றால் பெர்னார்து தவிர வேறு யாருமில்லை. அந்தளவிற்கு இவரின் புகழ் ஓங்கியிருந்தது. திருத்தந்தையர்களுக்கு ஆலோசகர் மட்டுமல்ல, இரண்டாவது சிலுவைப் போருக்கு கிறிஸ்தவர்களை தயாரித்த மாமறைப்போதகர் மற்றும், நம்பிக்கையின் காவலர். அவர்கள் சொல்வதையெல்லாம் கேளுங்கள் ஆனால் அவர்கள் வாழ்வது போல் ஆடம்பரமாக வாழாதீர்கள் என்றும் பணிபுரிய உங்களை தாழ்த்துங்கள் என இன்று நம்மையும் அழைக்கிறார். இந்த அழைப்பை அதற்கேற்ற பலன்தர வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, எமக்கு இப்போது நீர் கொடுத்துள்ள திருத்தந்தை திருஅவையின் பல தவறுகளுக்கு வருந்தி இறை இரக்கச் செயல்களை செய்யச் சொல்லியுள்ளார். இதனை ஏற்று திருத்தப்படுவதற்காக துன்பங்களை தாங்கிக்கொண்டு இறைப்பணி புரியும் எம் திருஅவை அனைத்து பணியாளர்களையும் நீர் உம் திருக்கரங்களால் தாங்கி அவர்களுக்கு துணையாக பலமாக இருந்து ஆசீர்வதித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பிள்ளைகளிடம் பேசுவதுபோல் எங்களிடம் இறைவார்த்தை வழியாக பேசும் ஆண்டவரே, நம்பிக்கையின் மக்களாகிய நாங்கள் உமது

அறிவுரைக்கு செவிசாய்த்து, எல்லா மக்களையும் உமது அருகில் கொண்டுவந்து சேர்த்து உமது பிள்ளைகளாக உம்மிடம் ஒப்படைக்க தளர்ந்து போகாமல் யாரும் புறம்பே தள்ளப்படாமல் நீர் அணைத்துக்கொள்ள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. மகிமையும் மாட்சிமையும் நிறைந்த இறைவா, எங்கள் மறைமாவட்டங்கள், மறைவட்டங்கள், பங்குகள், குடும்பங்களில் அருகில் உள்ள அனைவரும் ஒன்றாக இணைந்து எல்லா மக்களையும் உம்மிடம் கூட்டிச் சேர்க்கும் பணியை மேற்கொள்ளவும் உமதருளைப் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நானே வழியும் உண்மையும் வாழ்வும் என்ற இறைவா, உமது நற்செய்தி பணிபுரியும் பணியாளர்களாகிய அனைவரும் உமது அன்பிலே வாழ்ந்து பிறரையும் வாழவைக்க வேண்டிய அனைத்து வரங்களையும் தந்து உதவிட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## அரசியான புனித கன்னி மரியா

திருப்பலி
22.08.2026

### முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

இறையன்பில் வாழும் அன்பு உள்ளங்களே, இன்றைய தினம் நம் அரசியான அன்னையின் தினம். நம் தந்தையாகிய ஆண்டவரின் சிந்தனையில் உதித்த மங்கையற்கரசி நம் தூய கன்னிமரியாள். நமது திருத்தந்தை 12ம் பத்திநாதர் அன்னையின் மகத்துவத்தை மண்ணுலகோர் உணர 11.10.1956ல் இவ்விழாவை ஏற்படுத்தினார். நமது விவிலியத்திலும் இவ்விசுவாச கொள்கைக்கு ஆதாரங்கள் உண்டு. அன்னைமரியைப் பெற்றெடுத்தவரும், நம்மை மீட்ட இரட்சகருமான இயேசு கிறிஸ்து ஆண்டவரும், அரசருமானவர். நம் அன்னை மீட்பு களத்தில் அவருடன் ஒத்துழைத்தவர். மாசற்ற இருதயத்துடன் தன் மகனை அர்ப்பணித்தவர். அதனால்தான் இம்மாதத்தை மரியாளின் மாசற்ற இருதயத்திற்கு ஒப்புக்கொடுத்த மாதமாக சிறப்பிக்கின்றோம். தன் மகனையே கையளித்ததுமல்லாமல், மானிட சந்ததி அனைவருக்கும் செபித்து அனைவரும் இறையரசுக்கு செல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அரசியாக செபமாலை என்னும் புனிதமான மாலையை நம் கையில் கொடுத்து நம் அனைவரையும் தூய்மையின் மக்களாக வாழ வரம் தந்து தன் நேசமகனின் அனைத்து செயல்களிலும் துணையாக நின்ற மாபெரும் மகத்துவமிக்கவள். அவ்வாறே நம் அன்னையரும் இறைவனின் திருவுளத்திற்கேற்ற விதத்தில் தம் பிள்ளைகளை இறைப்பணியாற்ற தாராள உள்ளத்தோடு அர்ப்பணித்து இறையரசின் விழுமியங்களை மக்களுக்கு எடுத்துரைக்கும் நல்முத்துக்களாக பிள்ளைகளை வளர்த்து இறைவனுக்கு கையளிக்க வரமருள வேண்டி நம் அன்னையிடம் பரிந்துரைத்து அவளின் துணை வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு செபிப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. பாசமிகு இறைவா, நம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் உமது அன்பு கரத்தால் ஆசீர்வதிக்கும் அருளைப் பொழிந்தருளவும், உலக வாழ்வில் தங்களை இணைத்துக் கொண்டாலும் அவற்றிலிருந்து மீண்டும் உமது அளவற்ற இரக்கத்தினால் மன்னித்து உமது இறையாட்சி மலர அயராது உழைக்கவும் அரசியான நம் தாய் கன்னிமரியாள் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கம் நிறைந்த இறைவா, அபாயம் நிறைந்த இவ்வையகத்தில் பலவித தாக்கங்களால் அல்லல்பட்டுக் கொண்டு வாழ வழிவகை தெரியாமல் தவிக்கும் பல ஏழை மக்களுக்கு இரக்கம் கூர்ந்து, வாழ தகுந்த வழிகளை அவருக்குள் ஒளிர செய்ய வேண்டி அரசியான புனித கன்னிமரியாள் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. மருத்துவர்க்கெல்லாம் மருத்துவரே இறைவா, மருத்துவ வசதி இல்லா இடங்களில் உம் துணை ஒன்றையே நாடி நோயினால் நலிந்துகொண்டிருக்கும் பிள்ளைகளை, உமது கருணைக் கண்களால் அவர்களுக்கு முழுமையான உடல் சுகமளித்து, அவர்களில் உமது அளவற்ற அன்பை கண்டுகளிக்கும் பேற்றினைப் பெற்றவர்களாக வாழும் வரமருளவும், அரசியான புனித கன்னிமரியாள் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 21வது ஞாயிறு

திருப்பலி
23.08.2026

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

I. *எசா. 22:19-23* II. *உரோ. 11:33-36* *மத். 16: 13-20*

இறை இயேசுவில் அன்பானவர்களே, இன்று பொதுக்காலம் ஆண்டின் 21ஆம் ஞாயிறு. இன்றைய திருப்பலியில் இறைஞானத்தால் இயேசுவில் நம்பிக்கைக் கொண்டு அவரே இறைமகன் என்று அறிக்கையிட அழைக்கப்பட்டு தெய்வத்தின் திருவடியில் அமர வந்துள்ள இயேசுவின் அன்பிற்குரியவர்களே, உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறோம். நமது நம்பிக்கையின் தொடக்கமும் முடிவும் இறைவனே, அந்த இறைவனின் உதவியின்றி இயேசுவே ஆண்டவர் என்று நம்மால் அறிக்கையிட முடியாது.

இன்றைய வாசகங்கள் இயேசுவைச் சரியாகக் கண்டுணர நம்மை அழைத்துச் செல்கின்றன. இன்றைய நற்செய்தியில் கிறிஸ்து, "நான் யார்?" என்று கேட்டக் கேள்விக்கு அவருடைய சீடர்கள், மக்கள் நடுவில் அவரைப் பற்றி நிலவியக் கருத்துக்களைப் பிரதிபலித்தபோது, பேதுரு மட்டும்,

"நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்று சொன்னவுடன் கிறிஸ்து அவரிடம் விண்ணகத்தின் திறவுகோலை ஒப்படைக்கிறார் கட்டவும் கட்டவிழ்க்கவும் அவருக்கு அதிகாரம் அளிக்கிறார்.

இறைவனின் இரக்கப்பெருக்கத்திற்கு எல்லையில்லை. கடவுள் மனித அறிவுக்கு எட்டாதவர். எனவே இறைகொடைகளைத் தடையின்றிப் பெற்றுவரும் நாம் அவற்றின் வழியாக இறைமாட்சியடைய நம் செயல்பாடுகளில் மாற்றங்களைக் கொண்டு இறைபிரசன்னத்தை உணர்ந்து நம் வாழ்வைத் தொடர இன்றைய திருப்பலியில் ஒருமனதோராய் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. இரக்கப் பெருக்கத்தின் ஊற்றாகிய எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழி தவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. என்றும் எம்மை ஆட்சிச் செய்யும் எம் இறைவா, "நான் உங்கள் அடிமை" என்றும், "நான் உங்கள் பணியாளன்" என்றும் மேடையில் முழங்கிக் கொண்டு, அதற்கு எதிர் மாறாகச் செயலாற்றும் தலைவர்கள், ஒருவருக்குத் தரப்படும் அதிகாரம், அடுத்தவரை அடக்கி ஆள்வதற்கு அல்ல, மாறாக, அடுத்தவருக்குப் பணிச் செய்வதற்கே என்பதை உணர்ந்து அதிகாரத்தின் உண்மையான அர்த்தத்தைச் சிந்திக்க அதன்படி மக்களுக்குப் பணியாற்றத் தேவையான ஞானத்தை அருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. துன்பத்தில் நல்தேற்றுதல் தரும் எம் இறைவா, எம் நாட்டில் உமக்கும், உம் மக்களாகிய எங்களுக்கும் எதிராக மத தீவிரவாதம் மேலோங்கிக் குறிப்பாக, வட இந்தியாவில் அதிகரித்து, துன்புறும் உம் மக்களுக்குப் பாதுகாப்பு, உம்மில் ஆழமான நம்பிக்கை, உம் பணியாளர்களுக்குச் சவாலை எதிர்க்கொள்ளும் உறுதியான மனநிலைத் தந்து, உமது வல்லமையான கரங்களால் பாதுகாத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. நம்பிக்கையின் நாயகனே எம் இறைவா, எங்கள் குடும்பங்களில் உள்ள அனைவரும் தங்கள் உள்ளத்தில் இயேசுவே ஆண்டவர் என்று சான்றுப் பகிரவும், குடும்பம் என்ற இல்லம் சுயநலத்தால் சிதறி போகாமல் இருக்க உறுதியான பாசப்பிணைப்பை எங்களுக்குத் தந்து இவ்வுலகை வென்று நிலைவாழ்வுப் பெற்றுக் கொள்ளத் தேவையான வரங்கள் தரவேண்டுமென்று இறைவா உம்மை அன்புடன் வேண்டுகிறோம்.

# புனித பர்த்தலமேயு திருத்தூதர் விழா

திருப்பலி
24.08.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்று நம் திருஅவையானது இயேசுவின் சீடர் புனித பர்த்தலமேயுவின் விழாவை சிறப்பிக்கின்ற இந்நேரத்தில் இவரின் திருப்பலியில் பங்கெடுக்கும் நம் ஒவ்வொருவரையும் இறைவன் ஆசீர்வதிக்கட்டும். இவர் இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களில் இவரும் ஒருவர். இவர் நத்தனியேல் என்றும் அழைக்கப்படுவார். இயேசுவின் திருத்துாதர்களில் ஒருவரான பிலிப்பு என்பவரால் இயேசுவுக்கு அறிமுகமானவர். இயேசுவால் கபடற்ற உண்மையான இஸ்ரவேலர் என புகழப்பட்டவர். கானாவூரைச் சேர்ந்த இவர் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் இந்தியா மற்றும் ஆர்மீனியா போன்ற நாடுகளில் புனித பர்த்தலமேயு நற்செய்தி அறிவித்தார். இயேசுவின் விண்ணேற்பு நிகழ்வை கண்டவர்களில் இவரும் ஒருவர். ஆர்மீனியாவில் "போலிமியஸ் என்ற அரசனை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றியதால் கோபமடைந்த அவனது சகோதரன் "அஸ்ட்யாஜெஸ்" நமது புனிதர் பர்த்தலமேயுவுக்கு கொடூரமான தண்டனை அதாவது உயிரோடு தோலுரிக்கப்பட்டு தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டு இரத்தச் சாட்சியாக மரித்தவர். இவரது திருவுடல் பண்டங்கள் உரோம் நகரில் "திபெர்" தீவில் உள்ள புனித பர்த்தலமேயு பசிலிக்காவில் பாதுகாக்கப்படுகின்றன. இவரது பெயரில் துறவு மடங்கள் அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் "கோடி முனை" என்னுமிடத்தில் இவருக்கு ஆலயம் உள்ளது. இவரது ஓவியங்களில் கத்தியும், தன் தோலையும் கையில் வைத்திருப்பதாக சித்தரிக்கப்படுகிறார்.

இன்றைய நற்செய்தியில் புனித யோவான், திருத்துாதர் பிலிப்பு நத்தனியேல் என்னும் புனித பர்த்தலமேயுவை இயேசுவுக்கு அறிமுகப்படுத்தியபோது, நடந்த உரையாடலில் "நீரே இறைமகன் நீரே இஸ்ரவேல் மக்களின் அரசன் என கூறியபோது இயேசுவும் "உம்மை முன்பே சத்திமா நிழலில் பார்த்தேன், உம்மிடம் சொன்னதால் நம்புகிறீர் இதைவிட பெரியவற்றை காண்பீர் என கூறுவதாக கூறுகிறார். இயேசுவை "இறைவனின் மகன் இஸ்ரவேலின் அரசர்" என்று முதன் முதலாக அறிவித்த சீடர் உண்மையுள்ளவர், கபடமற்றவர் என்றவராய் இயேசு அவரை ஏற்றுக்கொள்கிறார். நாமும் நத்தனியேல் என்னும் புனித பர்த்தலமேயுவைப் போல உண்மையானவர்களாக, கபடற்றவர்களாக, இயேசுவை உறுதியுடன் நம்புவோம், நம்பிக்கையுடன் இயேசுவைப் பின்பற்றுவோம் என்ற உள்ளத்தோடு இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பின் இறைவா, நம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவற கன்னியர் மற்றும் அனைத்து

திருநிலையினரும், இவ்வுலகமும் அதில் உள்ள படைப்புகள் யாவும் இயங்குவதும், இயக்கப்படுவதும் பரம் பொருளான இயேசுவின் அன்பை மையமாகக் கொண்டதுதான் என்பதை உணர்ந்து, தமக்குரிய பணியினை சிறப்பாக செயல்படுத்த தூய ஆவியாரின் அருட்கொடைகளை நிறைவாக பொழிந்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. உண்மையின் இறைவா, வளரும் இளைய தலைமுறையினர் வளர்ந்து வரும் உலக ஆடம்பரங்களையும், தொழில்நுட்பக் கலாச்சாரங்களையும் நம்பி தங்களின் வாழ்வை அழித்துக்கொள்ளாமல், உண்மை தன்மையை உணர்ந்து, பெற்றோரின் வழிகாட்டுதலின்படியும், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வாழும் நல்லுள்ளம் கொண்டவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. கபடமற்றவர் என புனித பர்த்தலமேயு என்னும் நத்தனியேலை அழைத்த எம் இறைவா, நாங்கள் எங்கள் வாழ்வில், தூய்மையான உள்ளத்தோடும், உள்ளன்போடு சகோதர சகோதரிகளை பாவித்து, நல்லவற்றையே செய்யவும், பேசவும் உமக்கு முன்மாதிரியான வாழ்வை எங்கள் வாழ்வில் கடைப்பிடித்து வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## புனித மரிய ட்ரொங்காத்தி

**திருப்பலி**
**25.08.2026**

### முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

கிறிஸ்துவில் அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே, இன்று திரு அவையானது சலேசிய சபையைச் சேர்ந்த புனித மரிய ட்ரொங்காத்தி அவர்களின் திருவிழாவை கொண்டாட நம்மை அழைக்கிறது. இவர் இத்தாலி நாட்டில் கார்டெகோ கோல்ஜி (ப்ரேசியா) நகரில் 1883 பிப்ரவரி மாதம் 16ம் நாள் பிறந்தார். இவர் இளமைப் பருவத்திலிருந்தே கடின உழைப்பில் வாழ்ந்து மகிழ்ச்சியோடு இருந்தார். தினமும் அருட்தந்தையரிடம் மறைக்கல்வி கற்று இறை நம்பிக்கையில் வளர்ந்து வந்தார். முதல் உலகப்போரின்போது சிஸ்டர் மரியா வராஜ்லில் சுகாதாரப் பாதுகாப்பு பயிற்சியை முடித்து இராணுவ மருத்துவமனையில் செஞ்சிலுவை செவிலியராக பணியாற்றி வந்தார். இந்த மருத்துவ அனுபவம் ஈக்வடார் அமேசான் காட்டுப்பகுதியை ஒட்டியுள்ள ஊர்களில் இயேசுவைப் பற்றி அறிவிக்கும் சலேசிய மிஷினரியாக இவரை உயர்த்தியது. இங்குள்ள மக்களுக்கு இறைத் தந்தையின் அன்பு மற்றும் அன்னை மரியாவின் தாழ்ச்சியைப் பற்றி பெண்ணாக இருந்தாலும் கல்வாரிநாதரின் திருமுகத்தைப் பார்த்து சக்தி பெற்றவளாக மகிழ்ச்சியுடன் இறைப்பணி, மருத்துவப்பணி இரண்டின் மூலம் நம்பிக்கை இழந்தவர்களுக்கு "சிறிய தாயாக" காட்சியளித்தார்.

1960ல் இயற்கை வளங்களைச் சுரண்டும் வெள்ளைக்கார குடியேற்றக்காரர்களுக்கும் சுகூயா பகுதி மக்களுக்கும் ஏற்பட்ட

சண்டையின்போது சலேசியன் மிஷினரியாக பாதிக்கப்பட்ட சுசூயா மக்களுக்காக குரல்கொடுத்தார். 1969 ஆகஸ்டு 25ம் நாளில் ஏற்பட்ட விமான விபத்தில் அருளாளர் மரணமடைந்து அவரின் திருவுடல் மண்ணில் விழுந்த போது மோதல், சண்டைச் சச்சரவுகளும் வீழ்ந்து சிதறிப்போயின. 2008ல் வணக்கத்திற்குரியவர் என அறிவிக்கப்பட்டு 2012ல் அருளாளர் பட்டம் பெற்ற மரியா ட்ரொங்காத்தி 2025 அக்டோபர் 19 அன்று திருஅவையின் புனிதராக அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டார். இவரின் வாழ்வை முன்மாதிரியாக கொண்டு நாமும் நமது வாழ்வில் பிறரின் வாழ்வை மதித்து அவரின் துன்ப வேளையில் நம்மால் முடிந்த உதவிகளைச் செய்யும் ஆற்றல் கொண்டவர்களாக வாழ இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நன்மைகளின் நாயகனே இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் உமக்கேற்ற வாழ்க்கை வாழ்ந்து எல்லோருக்கும் நன்மை செய்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. அரசர்களுக்கெல்லாம் அரசே எம் இறைவா, உமது மக்களை செம்மையாய் வழிநடத்த உம்மால் தெரிந்துக்கொள்ளப்பட்ட எம் தலைவர்கள் உமது அரசை இப்பூமியில் தழைக்கச்செய்ய வேண்டிய ஞானத்தையும், வல்லமையையும் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளிக்கும் இறைவா, புனித மரிய ட்ரொங்காத்தியின் மருத்துவ சேவை ஏழை எளிய மக்களுக்கு நற்சுகமளித்தது மட்டுமல்லாமல், இறை நம்பிக்கையில் வேரூன்றி நிற்கச் செய்தது. அதைப்போல் நாங்களும் உடல் அளவிலும், மனதளவிலும் சுகம்பெற்றவர்களாக நம்பிக்கையில் வாழ வளர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# அருளாளர் செப்பரினோ நமுங்க்குரா

திருப்பலி
26.08.2026

## முன்னுரை

*அருட்சகோ. யோவான் ச.ச*

அன்பார்ந்த இறைமக்களே, இன்று நாம் சலேசிய சபையின் இளம் தாரகையும், அர்ஜென்டினா நாட்டின் பூர்வகுடிப் புதல்வருமான அருளாளர் செப்பரினோ நமுங்க்குரா அவர்களின் நினைவு நாளைக் கொண்டாடுகிறோம். "நான் ஒரு சலேசிய குருவாக வேண்டும், என் மக்களுக்குச் சிறந்த மதபோதகராக வேண்டும்" என்ற உயரிய ஆன்மீகத் தாகத்தோடு வாழ்ந்தவர் இவர். புனித தொன் போஸ்கோவின் இல்லத்தில் அவர் பெற்ற அன்பும், ஆன்மீக அனுபவமும் அவரின் வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்தன. புனித தோமினிக் சாவியோவைத் தன் முன்மாதிரியாகக் கொண்டு, ஐந்து ஆண்டுகள் கடின விடாமுயற்சியால் தன் இயல்புகளை மாற்றி, பக்தி, கடமை,

தியாகம் ஆகியவற்றில் சிறந்து விளங்கினார். ஆரம்பத்தில் ஒழுங்கு முறைகளுக்குக் கீழ்ப்படிய சிரமப்பட்டாலும், சலேசிய ஆன்மீகத்தால் செபத்திலும் படிப்பிலும் சிறந்து விளங்கி, சக மாணவர்களின் அன்பான தலைவராக உயர்ந்தார். சிலுவை அடையாளத்தைப் பக்தியோடு வரைந்து, பிறரையும் ஈர்த்த இவரது வாழ்வு எளிய வழியில் புனிதமடைய நமக்குக் கற்றுத் தருகிறது. இத்தாலியில் உயர் கல்வி பயின்று, திருத்தந்தை பத்தாம் பயஸைச் சந்திக்கும் பாக்கியம் பெற்ற இவர், தன் உடலில் மறைந்திருந்த காசநோயின் கொடுமையைச் சகித்துக்கொண்டு, 1905 ஆம் ஆண்டு தன் 19ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார்.

இன்றைய திருப்பலியில் பங்கேற்கும் நாமும், இந்த இளம் அருளாளரைப் போல விடாமுயற்சியும், ஆழமான இறைபக்தியும், பிறரை வழிநடத்தும் அன்பான குணமும் கொண்டவர்களாய் வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவைப் பணியாளர்களுக்காக: எம்மை நல்வழியில் நடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் நல்ல உடல் உள்ள நலம் பெற்று, உம் பணியில் வரும் இன்னல்களையும் சவால்களையும் அருளாளர் செப்பரினோவின் மனஉறுதியோடு எதிர்த்துப் போராடும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. இளையோருக்காக: அருளாளர் செப்பரினோ நமுங்க்குரா தன் வாழ்வில் கடைபிடித்த விடாமுயற்சி, நற்பண்புகள் மற்றும் இறைநம்பிக்கையை எம் இளையோரும் பெற்று, தாங்கள் செய்கின்ற அனைத்து முயற்சிகளிலும், படிப்பிலும் உம் அருளுதவியால் வெற்றிபெற அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகின்றோம்.

3. சிறுவர் மற்றும் பிள்ளைகளுக்காக: அன்புத் தந்தையே இறைவா, புனித சாவியோவை முன்மாதிரியாகக் கொண்டு இறைபக்தியில் சிறந்து விளங்கிய அருளாளர் செப்பரினோவின் வாழ்வைக் கண்டுணர்ந்து, எங்கள் குடும்பங்களில் உள்ள பிள்ளைகளும் செபவாழ்விலும், கீழ்ப்படிதலிலும், இறைபக்தியிலும் சிறந்து விளங்க உமதருளைப் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

4. நோயாளிகளுக்காக: தன் நோயைப் பொருட்படுத்தாது இறுதிவரை புன்னகையோடும் அமைதியோடும் இறைபணி செய்த எம் அருளாளர் செப்பரினோ நமுங்க்குராவின் பரிந்துரையால், எங்கள் பகுதியில் உயிர்க்கொல்லி நோய்களாலும் காசநோயினாலும் வாடும் அனைவரையும் ஆசீர்வதித்து, அவர்களுக்கு நோயைத் தாங்கும் சக்தியையும், மனதிடத்தையும், உடல் குணமாகும் அருளையும் தந்து அருள்புரியுமாறு இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

# புனித மோனிக்கா

திருப்பலி
27.08.2026

## முன்னுரை

*திரு.T. சாம்சன்*

அன்பிற்குரிய இறைமக்களே, இன்னாள் நாம் தாய்த்திருஅவையின் வழிகாட்டுதலின்படி, புனித அகுஸ்தினாரின் தாயாரான புனித மோனிக்கா அவர்களின் திருநாளைச் சிறப்பிக்கக் கூடிவந்திருக்கிறோம். புனித மோனிக்கா, தன் வாழ்வில் வந்த இக்கட்டுகளையெல்லாம் பொறுமையுடன் சகித்தாள். இவளது நல்வாழ்வும், சாந்த குணமும், ஆயரான புனித அம்புரோஸ் அவர்களின் முயற்சியால் தனது மகன் அகுஸ்தீன் மனந்திரும்பினார். தாயும் மகனும் சில நண்பர்களுடன் ஆப்பிரிக்காவுக்குப் புறப்பட்டார்கள். வழியில் தன் மகனது கரங்களில் அவள் உயிர் விட்டாள். கண்ணீரோடும் இடைவிடாத செபத்தோடும் தன் மகனின் மாற்றத்திற்காக வாழ்நாள் முழுவதும் போராடியவர் புனித மோனிக்கா. இவருடைய வாழ்வு நம் குடும்பங்களுக்கும், தாய்மார்களுக்கும் ஒரு நம்பிக்கை ஒளியாகத் திகழ்கிறது. இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் இயேசு, "விழித்திருங்கள், ஏனெனில் உங்கள் ஆண்டவர் வரும் நாளை நீங்கள் அறிய மாட்டீர்கள்" என்று எச்சரிக்கிறார். நாமும் நமது குடும்பங்களில் இறைவனின் வருகைக்காக விழிப்புணர்வோடும், செபச் சிந்தையோடும் வாழ்ந்திட அருளை வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள் மற்றும் குருக்கள் அனைவரும் உமது வார்த்தையில் உறுதியாகவும், விழிப்புணர்வுள்ள பணியாளர்களாகவும் திருஅவையைத் தாங்கிப் பிடிக்கத் தேவையான ஞானத்தையும் அருளையும் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. குடும்பங்களின் பாதுகாவலியே புனித மோனிக்கம்மாளே, உமது முன்மாதிரியைப் பின்பற்றி எங்கள் குடும்பங்களில் உள்ள தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளின் ஆன்மீக வாழ்வுக்காகவும், நல்வழிக்காகவும் கண்ணீரோடும் செபத்தோடும் உழைக்கத்தக்க பலனைத் தாரும். வழிதவறிச் செல்லும் இளைய தலைமுறையினர் மனம் திரும்பி உமது இல்லம் தேடி வர அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆண்டவரே, நாங்கள் உலகப் பொருட்களின் மோகத்தில் மயங்கிவிடாமல், உம் வருகைக்காக எப்போதும் தயாராக இருக்கும் விழிப்புள்ள இதயங்களைத் தாரும். எமது சோதனைகளையும் பலவீனங்களையும் தாண்டி உமது பார்வையில் நீதிமான்களாக வாழ எங்களை வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# புனித திருமுழுக்கு யோவானின் பாடுகள்

திருப்பலி
29.08.2026

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

அன்பிற்கினிய இறைமக்களே, இன்று திருஅவை, திருமுழுக்கு யோவானின் திருப்பாடுகளின் நினைவுத் திருவிழாவை பக்தியுடன் கொண்டாடுகிறது. உண்மைக்காகவும், நீதிக்காகவும், இறைவனின் திருவுளத்தை அஞ்சாது அறிவித்த இறைவாக்கினரான திருமுழுக்கு யோவான், தனது உயிரையே சாட்சியாக அர்ப்பணித்தார். அவரது வாழ்க்கை, உண்மையை நிலைநிறுத்த தைரியமும், இறைவனுக்கான முழுமையான அர்ப்பணிப்பும் கொண்டதாக இருந்தது.

இயேசு கிறிஸ்துவின் முன்னோடியாக போற்றப்படுபவர் திருமுழுக்கு யோவான். இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்தி திருமுழுக்கு கொடுத்த பெருமை இவரையே சாரும். இவர் அனைத்தும் துறந்த துறவியாக பாலைவனத்தில் வெட்டுக் கிளியையும் காட்டுத் தேனையும் உண்டு விலங்கு தோல் அணிந்து புதுவகையான இறைசெய்தி பகிர்ந்தவர். மனந்திரும்பியவர்களுக்கும், திருமுழுக்கு அருட்சாதனம் பெறுபவர்களுக்கும், துறவிகளுக்கும், நெய்வோருக்கும் பாதுகாவலர் ஆவார். யோவான் என்ற பெயருக்கு "அருளளிப்பவராம் யாவே" என்று பொருள். "திருமுழுக்கு" என்கிற அடைமொழி மக்களுக்கு இவர் திருமுழுக்கு கொடுத்த நிமித்தம் கொடுக்கப்பட்டது. இவர் இறைவனின் கொடையாக செக்கரியாவுக்கும் எலிசபெத்துக்கும் அவர்களின் முதிர் வயதில் ஆலய குருவின் சந்நிதியில் பிறந்தவரும் அன்னை மரியாளின் உறவினரும் ஆவார். இறைமகன் இயேசுவின் வருகையை முன்னறிவிக்கும் முக்கிய பணி இவரிடமே அளிக்கப்பட்டிருந்தது. இவரைப் பற்றி எசாயா மற்றும் மலாக்கு புத்தகங்களில் நானூறு ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டிருந்தது. அனைத்து நற்செய்திகளும் திருத்தூதர் பணி புத்தகமும் இவரை முக்கிய நபராய் மெய்ப்பித்து காட்டுவதை நாம் பார்க்கின்றோம். இன்றைய உலகில் பல்வேறு சவால்களும், உண்மையை மறைக்க முயலும் சூழல்களும் நிறைந்திருக்கின்றன. அவற்றின் மத்தியில், திருமுழுக்கு யோவானைப் போல இறைவனின் வார்த்தைக்கு நம்பிக்கையுடன் வாழ, நீதியையும் உண்மையையும் துணிவுடன் சாட்சியப்படுத்தவும் நம் மனதை இறைவனிடம் உயர்த்தி, பக்தியுடனும் நன்றியுடனும் இத்திருப்பலியைக் கொண்டாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. ஆண்டவரே, எங்களது திருத்தந்தை, ஆயர்கள் மற்றும் குருக்கள் அனைவரையும் உமது தூய ஆவியால் நிரப்பும். திருமுழுக்கு யோவானைப் போல எவ்வித அச்சமுமின்றி உமது உண்மையை உலகிற்கு எடுத்துரைக்கும் வலிமையையும் மன உறுதியையும் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதிக்கும் சமத்துவத்திற்கும் குரல் கொடுக்க வேண்டிய தலைவர்கள், சுயநலமும் அகந்தையும் கொண்டு செயல்படாமல், நேர்மையான வழியில் மக்களை வழிநடத்தவும், ஒடுக்கப்பட்டோரின் உரிமைகளைப் பாதுகாக்கத் தேவையான ஞானத்தையும் கனிவையும் அவர்களுக்கு அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆண்டவரே, இன்று உலகின் பல பகுதிகளில் உமது பெயருக்காகவும் உண்மைக்காகவும் இன்னல்களைச் சந்தித்து வரும் அனைத்து மறைசாட்சிகளையும், கிறிஸ்தவ மக்களையும் உமது கரங்களில் தாங்கிப் பாதுகாப்பீராக. அவர்களின் நம்பிக்கை தளராமல் இருக்க உமது பிரசன்னத்தை அவர்களுக்கு உணர்த்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. எங்கள் குடும்பங்களில் தீய பழக்கவழக்கங்களுக்கும் சோதனைகளுக்கும் இடம்கொடாமல், உமது வழியில் நடக்கும் நன்மக்களாக எங்களை மாற்றியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



## பொதுக்காலத்தின் 22ம் ஞாயிறு

திருப்பலி
30.08.2026

### முன்னுரை

*திரு. ஜான் போஸ்கோ*

I. *எரே. 20: 7-9* II. *உரோ. 12: 1-2* *மத். 16: 21-27*

இறையேசுவின் இனிய திருக்குலமே, இன்று பொதுக்காலம் 22ம் ஞாயிறு திருப்பலியைச் சிறப்பிக்க நாம் ஒன்று கூடியுள்ளோம். இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு இனிமையாகவும், வாழ்வதற்கு எளியதாகவும் இருக்கும் என்று எண்ணுகின்றவர்கள் ஏமாற்றத்திற்கு ஆளாவார்கள். ஏனென்றால் இறைவார்த்தையானது இறையாட்சியை இவ்வுலகில் கட்டி எழுப்புவதற்காக வெளிப்படுத்தப்படும் இறைத்திட்டத்தின் வெளிப்பாடாகும்.

உலகப்போக்குக்கு எதிராக இறைத்திட்டத்தை நிறைவேற்றுவது என்பது சவால்கள் நிறைந்தது. அன்றாட வாழ்க்கையின் சவால்களை ஏற்றுக்கொண்டு இறையாட்சியை அமைக்க இறைவன் விடுக்கும் அழைப்பை ஏற்பவர்கள் தாங்கள் இறையாட்சியின் கருவிகள் என்ற மனநிலையில் உறுதியாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட மனஉறுதி இல்லாதவர்கள் உலகப்போக்கிலே வாழ்பவர்கள் வாழ்க்கையில் ஏமாற்றம் அடைகிறார்கள்.

தங்களுடைய அழைப்பின் அர்த்தத்தை அறியாது உலகத்தை ஆதாயமாக்குவதால் என்ன பயன்? உலகத்துக்கும் பயனில்லை, ஆதாயமாக்கிக் கொண்டவருக்கும் பயனில்லை. வாழ்வைக் காத்துக் கொள்ள நினைப்பவர்களுக்கு உலகத்திலே வாழ்வுண்டு என்பதை உணர்ந்து இறைவார்த்தையை வாழ்வாக்கும்போது, இறைவனுக்கு ஏற்றவை பற்றி

எண்ணி மனசாட்சியோடு வாழும்போது வாழ்வைக் காத்துக் கொள்வர், இறையாட்சியின் கருவிகளாக மாறுவர். அதற்கான செயல்பாட்டில் வெற்றி பெற முயல்வர். அப்பொழுது இறைவன் நம்மை ஏமாற்றவில்லை; நாமும் ஏமாந்து போகவில்லை என்ற உண்மையை உணர்த்துவதுதான் இன்றைய வாசகங்கள்.

இறைவனின் இவ்வார்த்தைகளை உண்மையாக உணர்ந்து நம் வாழ்வில் செயல்படுத்துபவர்களாக இருக்க நாம் முயற்சி செய்வோம். கடவுளின் வல்லமை நம் வழியாகச் செயல்படும்போது இந்த உலகத்தையே நாம் வெற்றி கொள்வோம். இறையாட்சியை இவ்வுலகில் மலரச் செய்ய இறையாட்சியின் கருவிகளாக மாறுவோம் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் பக்தியோடு பங்குக்கொள்வோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பின் விண்ணகத் தந்தையே, திருஅவையின் தலைவர்களான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரையும் உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம். தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதன் நோக்கத்தை மனதில் நிறுத்தி செயல்படும்போது வாழ்வில் ஏற்படும் தடைகளை உடைத்தெறிந்து உமது கருணையினால் பாதுகாத்து இறைச்சித்தத்தின்படி நாளும் நடந்திட அருள்புரியுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. கருணையின் கடலே எம் இறைவா, காலச்சூழலுக்கேற்ப நடக்கின்ற உம்மக்களை ஆசீர்வதியும். நாங்கள் உம்மை மறந்து, உலக மாயைகளை நம்பி தவறான வழியில் செல்கின்றவர்கள் மனம்மாறி மீண்டும் உமது அடிச்சுவடுகளைப் பின்பற்றி உம்மை முகமுகமாய் தரிசிக்கும் நல்மக்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாப்பின் பிறப்பிடமே, இன்றைய இளைய தலைமுறையினரை உமது பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களுக்கு நல்லதொரு வாழ்க்கைத்துணையும், வேலைவாய்ப்பும் கிடைக்கப்பெற்று வாழ்வில் வளர உமது நற்செய்தியின்படி வாழ உம் தூய ஆவியின் அருட்கொடைகளை பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. மருத்துவருக்கெல்லாம் மருத்துவரே எம் இறைவா, இன்று பலவிதமான நோயினால் துன்புறும் உம் மக்களை கண்ணோக்கும். தாங்கள் பண கஷ்டங்களாலும், பொருளாதார பற்றாக்குறையினாலும் பலவிதமான தவிர்க்க முடியாத காரணங்களால் தங்களின் நோயினைப்பற்றி கவலையோடு தங்களையே மாய்த்துக் கொள்கிறார்கள். இவர்களுக்கு நீரே உற்றத் துணைவர், நல்மருத்துவர் என்பதை உணர்ந்து நோயிலிருந்து தாங்கள் விடுதலைப்பெறுவோம் என்ற ஆழ்ந்த நம்பிக்கை தங்களிடையே வாழும் நல்குணநலன்களை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி-2

# நம்பிக்கையில் வளர...



# மரியாவின் விண்ணேற்பும் விடுதலையும்

*திருமதி ரோஸ்லின் மேரி*

உலகியல் வாழ்வில் புகழ்பெற்றவர்களின் தாய்மார்களை, முக்கியத் தலைவர்களின் தாய்மார்களை, அவர்கள் பிள்ளைகள் பெயரோடோ அல்லது பதவியோடோ இணைத்துச் சொல்வது வழக்கத்தில் உள்ள ஒன்று. ஜனாதிபதியின் தாய், பிரதமரின் தாய், முதலமைச்சரின் தாய், காமராஜரின் தாய், டாக்டர் அப்துல் கலாமின் தாய்... என அடுக்கிக்கொண்டே போகலாம். இதுபோன்றே, இயேசு கிறிஸ்து மூவுலகின் அரசர், அவரது தாய் அவரது இறையாட்சியில் அரசி. இயேசு கிறிஸ்துவின் அரசாட்சியில் அவரது தாய்க்குச் சிறப்பான பங்குத் தரப்படுகிறது. அவர் அரசர் என்றால், அவரது தாய் அரசி என்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. அது இயல்பான ஒன்று. இயேசுவின் அரசாட்சி இல்லாமல் மரியாவின் அரசி என்ற பட்டம் அர்த்தமற்றதாகிவிடும். இயேசுவோடு அவர் இணையும்போதுதான் மரியாவுக்கு அரசி என்ற பட்டம் பொருந்தும், பொருள்படும்.

கிறிஸ்தவர்கள் அன்னை மரியாவை "கடவுளின் தாய்" என்று அழைக்கும் முன்னரே அவருக்கு விண்ணக அரசியாக வணக்கமும், மரியாதையும் செய்துள்ளனர். இது தொடக்க திருஅவையின் நம்பிக்கை. நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே அன்னை மரியாள் "அரசி" என்ற

பட்டத்துடன் அழைக்கப்பட்டுள்ளார். அதனைத் தங்கள் அன்றாட வழிபாடுகளிலும், செயல்களிலும் மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர். மேலும் 12ம் நூற்றாண்டில் அன்னையின் விண்ணேற்புக்குப் பின் தன் மகனால் அவர் முடிசூட்டப்பட்டு, விண்ணக அரசியாக இருக்கிறாள் என்ற நம்பிக்கை மக்களிடையே வெகுவாகப் பரவியிருந்தது. 14ம் நூற்றாண்டில், மரியாவும், இயேசுவும் மிகவும் நட்புறவோடு, தோழமையோடு அருகருகே அமர்ந்திருப்பதைப் போன்றும், இயேசு சற்று குனிந்து தன் தாய்க்கு மகுடம் சூட்டுவது போன்றும் வரைபடங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எனவே தொடக்கக் காலத் திருஅவையில் இருந்து, இன்றுவரை மரியா விண்ணக அரசியாகவே பார்க்கப்பட்டிருக்கிறார் என்பது நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒன்று. நடைமுறை வாழ்வில் பொதுவாகவே அரசனுடைய மனைவி, அவனுடைய தாய் இருவருமே அரசி என்றே அழைக்கப்பட்டுள்ளனர். தன் மகனின் இறப்பிற்குப் பிறகு அரசரின் தாய் ஆட்சி செய்திருப்பதையும் அரசரின் மனைவியரைக் காட்டிலும் அரசரின் தாய்க்கு மிக முக்கியத்துவமும் மரியாதையும் அந்தஸ்தும் தரப்பட்டுள்ளதையும் இஸ்ரயேல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நாடுகளின் வரலாறு விளக்குகிறது.

தன் மகன் அகாசியா இறந்தப் பிறகு அவனது தாய் அதாலியா 7 ஆண்டுகள் ஆட்சி செய்திருக்கிறாள் (2அர 8: 26,11:1-4). 1அர15: 9-14) யூதாவின் அரசன் ஆசா, தன் தாய் மாக்காவுக்கு அரச அன்னைப் பதவியைத் தந்திருக்கிறார். அவர் குற்றம் செய்ததனால், அவரை அப்பதவியிலிருந்து நீக்கினார். எனவே தாய்க்கு அரசாட்சியில், அரசவையில் சிறப்பான இடம் இருந்தது என்பதனை விவிலிய வரலாறே குறிப்பிடுகிறது. அன்னை மரியாளுக்கும் அப்படித்தானே.

அதேபோல் விவிலியத்தைப் பார்ப்போமேயானால், சாலமோன் அரசனுக்குச் சிறப்பான இடம் உள்ளது. இந்த அரசனின் தாய் பெத்சபா, அந்தோணியாவுக்காக அரசனிடம் பரிந்துப்பேச ஒப்புக் கொள்கிறார் (1அர 2:18). அவர் தன் மகன் சாலமோனைச் சந்திக்கச் சென்றபோது, அரசர் எதிர்கொண்டு வந்து வணங்கியப்பின் அரியணையில் அமர்ந்துக்கொண்டார் (1அர 2:19) என குறிப்பிடப்பட்டுள்ளது. அரசனேயானாலும் தாய்க்கு வணக்கம் சொல்லும் உயரிய மரபு இருந்துள்ளதை அறிகிறோம்.

மேலும் அவரது தாய்க்கு அவரது வலப்புறத்தில் ஓர் இருக்கைத் தரப்பட்டது. அதில் பெத்சபா அமர்ந்தார் (1அர 2:19). சாதாரண அரசர்களே தாய்க்கு இவ்வளவு உயரிய இடம் தந்துள்ளபோது நீ என் தசையின் தசை, எலும்பின் எலும்பு என்ற இறைவார்த்தைக்கு உரிமையாக தன்னை பத்து மாதங்கள் சுமந்து பெற்று தனக்கு பாலூட்டி சீராட்டி வளர்த்த அன்னையின் உடல் பாவத்தின் கூலியாக மரணத்தின் பிடியில் ஒரு வினாடி கூட இருக்க ஆண்டவர் விடவில்லை, அவரை விண்ணகம் எடுத்துக் கொண்டார்.

திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1950ம் ஆண்டு மரியாளின்

விண்ணேற்பினை விசுவாசக் கோட்பாடாகப் பிரகடணப்படுத்தினார். "மரியா இறைவனின் மாசற்ற தாய் மண்ணக வாழ்வு முடிந்தபோது உடலோடும், ஆன்மாவோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இதனை இறைவனால் அறிவிக்கப்பட்ட விசுவாசக் கோட்பாடாக அறிவிக்கிறோம், பறைச்சாற்றுகிறோம், மற்றும் வரையறுக்கின்றோம்" (Ascention) என்றும், மரியாள் விண்ணகம் எடுத்துச் செல்லப்பட்டதை "மரியாளின் விண்ணேற்பு" (Assumption) என்றும் திருத்தந்தை தெளிவுப்படுத்துகிறார்.

விண்ணகம் எடுத்துக்கொள்ளப்பட்ட மரியாளை இயேசு தன் அருகில் ஓர் உயர்ந்த அரியணையைக் கொடுத்து அரசியாக்கினார். இதனைத்தான் திருஅவையானது ஆகஸ்டு 22ம் நாளை தூய கன்னிமரியாள் விண்ணக - மண்ணக அரசியாக முடிசூட்டப்பட்ட நாளாகக் கொண்டாடுகிறது. திருஅவையானது 1954ம் ஆண்டு அன்னை மரியாளின் ஆண்டாகக் கொண்டாடிய வேளையில், திருத்தந்தை 12ம் பத்திநாதர் அக்டோபர் 11ம் நாளன்று தமது சுற்றுமடலில் "அரசியான தூய கன்னி மரியா" விழாவை அறிமுகப்படுத்தினார்.

"விண்ணக மகிமையில் உருவாக கன்னிமைக்குன்றா அரசியே" என்று புனித எப்ரேமும், "பூவுலகை ஆளும் அரசரை ஈன்ற அன்னையே" என்று புனித கிரகோரி ஓசியான்சனும், க்ரேத்தே நகர் புனித ஆன்ட்ரு மனுக்குலத்தின் அரசியே என்றும் அன்னையின் பெருமையை எடுத்துரைத்துள்ளனர். இப்படி மூவொரு கடவுளால் விண்ணக-மண்ணக அரசியாக மகுடம் சூட்டப்பட்டு மரியாள் மூவுலக இராக்கினியாக விளங்குகிறார். "நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று கூறி தன்னையே தந்தைக்கும், தரணிக்கும் தந்த அந்தநாள் முதல், விண்ணுக்கும் மண்ணுக்கும் அரசியாக முடிசூட்டப்பட்ட நாள்வரை இறைவழியே என் வழி என நடந்தார் அன்னை மரியா. அயலான் அன்பு, தாயன்பு, பரிந்து பேசுதல், கீழ்ப்படிதல், வேதனை, சோதனை எல்லாம் இறைச்சித்தம் என்று ஏற்றுக்கொண்டு தன்னையே அர்ப்பணித்தார்.

இப்பெரும் பேருண்மையாளை வாழ்த்துவதில் நாம் பெருமையும், மகிழ்ச்சியும் அடைய வேண்டும். இன்றைய உலகில், வீணான அரசியல்வாதிகளை, மனித நேயமற்ற மிருகங்களை, அடுத்தவரை அழித்து தான் மட்டும் முன்னேற்றம் காண்பவனை, ஊழல்வாதியை, வாழ்க... வாழ்க என கோசமிட்டுத் திரிகிறோம். இந்நீச மனிதர்களையெல்லாம்விட மரியா இறைத் திருவுளத்தை இறுதியாய், உறுதியாய், ஏற்றவர். மனித வாழ்வின் நிறைவாகவும் மற்றவர்கள் நிறைவடையவும், தம் வாழ்வைத் தகுதியாக அமைத்துக் கொண்ட "விண்ணக - மண்ணக அரசி அன்னை மரியே, வாழி... வாழி" என வாழ்நாளெல்லாம் வாழ்த்துவோம். கடவுளின் இறையருள் செயல்முறைக்கு நம்மை அர்ப்பணிப்போம். நம் அன்னையும், அரசியுமான மரியாளுக்குரிய பிள்ளைகளாக எளியோரை உயர்த்தும் பணியில் இறைவனுடனும் அன்னை மரியாளுடனும் சேர்ந்து செபிப்போம்.



# அருளாளர் செப்பரீனோ நமுங்க்குரா

## வாழ்வு தரும் பாடம்

*திரு. ஜான் அலெக்ஸ்*

**பம்பாஸ் மாகாணம்:** இலத்தீன் அமெரிக்க நாடுகளுள் ஒன்றான அர்ஜென்டினாவின் தென் மத்தியப் பகுதியில் உள்ளது பம்பாஸ் மாகாணம். லத்தீன் அமெரிக்கப் பகுதிகளில் வாழ்ந்த கருப்பினத்தவரும் பூர்வ குடிகளும் ஐரோப்பிய நாடுகளின் காலணியாக்கும் வெறியினால் அடிமைகளாக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். அதாவது ஆங்கிலோ - இந்திய காலணிகள் போன்று அர்ஜென்டினா-ஸ்பெயினின் காலணியாகிக் கொண்டிருந்தது. 1870களில் ஏறக்குறைய அர்ஜென்டினாவின் எல்லா குறுநிலங்களும் நசுக்கப்பட்ட நிலையில் பம்பாஸின் தென் மத்திய பகுதியில் வாழ்ந்து வந்த அரோக்கன் பழங்குடியினரின் தலைவராயிருந்து மக்களுக்காகச் சண்டையிட்டு வாழ்வுரிமைக்காகப் போராடிய அந்த அரோக்கன் பழங்குடியினரின் தலைவராயிருந்த மனுவேல் நமுங்க்குரா - ரொசாரியா தம்பதியின் ஆறாவது மகனாகப் பிறந்தவரே செப்பரினோ நமுங்க்குரா.

**பழங்குடியில் புனிதத்தின் முன்னோடி:** மொராலெஸ் நமங்க்குரா என்று பெயரிடப்பட்டவர் பின்னாளில் "மொராலெஸ்" என்பதை செப்பரினோ என்று

பெயர் மாற்றப்பட்டார். ஒரு பழங்குடியினரின் குடும்பத்தில் பிறந்தவர் என்றாலும் பிற்காலத்தில் ஒரு புனிதத்தின் முன்னோடியாய் திகழ்வார் என்பதற்குச் சான்றாய் அமைந்தது அவருடைய குழந்தைப் பருவம். தன் மூதாதையரின், பின்புலம் பற்றி அறிந்திருந்த செப்பரீனோ தானும் ஒரு போர் வீரனாய் உருவெடுப்பதையே விருப்பினார். அதுமட்டுமல்ல தன் இனத்தவரின் எதிர்கால வித்தாகத் திகழப்போகிறவர் என்ற பெருமையைப் பெற்றார்.

**கல்லெறிய குலுங்கியது கடல்:** செப்பரீனோ 1897ல், தனது தந்தையால் புவோன்ஸ் ஏர்ஸில் இராணுவப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். தொடக்கமுதலே அதை விரும்பாத செப்பரீனோவின் மனது வேறெதையோ நாடியவாறு காணப்பட்டது. இதை நன்கு புரிந்துகொண்ட செப்பரீனோவின் தந்தை மனுவேல், அவரை அதே பகுதியில் உள்ள சலேசிய பள்ளி ஒன்றில் சேர்த்தார். அன்பும், அரவணைப்பும், புரிதலும் முழுமையாய் இருந்த அந்த சலேசிய பள்ளி செப்பரீனோவுக்கு எல்லையில்லா மகிழ்ச்சியையும் அருளையும் வாரி வழங்கியது.

**பழங்குடி வாழ்வு-சலேசிய பாணி:** அடிப்படையில் இவர் பக்தி முயற்சிகள், மறைக்கல்வி, அருளடையாளங்கள், நற்கருணை பக்தி, செப ஆர்வம் போன்றவற்றில் நாட்டம் உள்ளவராய் இருப்பதை சலேசிய பள்ளியில் இருந்த சலேசியர்கள் கண்டு கொண்டனர். வரிசையில் நிற்பது, சில கட்டுப்பாடுகளோடு வாழ்வது, சக மாணவர்களிடம் ஒத்து வாழ்வது போன்றவை சுதந்திரமான பழங்குடி வாழ்க்கையில் வளர்ந்த செப்பரினோவுக்கு முதலில் நடைமுறைக்கு ஒவ்வாதவையாகத் தோன்றினாலும் காலப்போக்கில் இவற்றை ஏற்று பிற மாணவர்களுக்கு முன்மாதிரியாகப் பேசப்படும் அளவிற்கு தனது வாழ்வை வளர்த்துக்கொண்டார்.

**அமைதியின் உருவம்:** செப்பரினோ அமைதியின் உருவமாக வாழ்ந்தார் என்பதற்குப் பல குறிப்புகள் காணப்படுகின்றன. தன் முதல் திருவிருந்து நாளுக்கு முன் தன்னோடு மனத்தாங்கல் கொண்டிருந்த ஒரு மாணவனிடம் சென்று மன்னிப்புக் கேட்ட நிகழ்ச்சியை அவருடைய வரலாற்றுப் பக்கங்கள் தெரிவிக்கின்றன. அது மட்டுமல்ல பல முறை, மாணவர்களிடையே சண்டை வந்தபோது செப்பரினோவின் நடுநிலையான ஆலோசனையினால், தீர்வுகள் காணப்பட்டன என்பதை அவருடைய நண்பர்கள் குறிப்பிட்டுள்ளதைப் பார்க்க முடிகிறது.

**தீர்க்கமான பக்தி-அசாத்தியமான சுயக்கட்டுபாடு:** மாணவர்கள் ஒவ்வொரு நாளும் குழுவாக சிலுவைப்பதைச் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். செப்பரீனோவின் தலைமையில் உள்ள குழுவில் மட்டும் எப்போதுமே எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இதற்கு

செப்பரீனோவிடம் காணப்பட்ட பக்தியே என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இதுவே பல இளையோரை இவரின் பக்கம் ஈர்த்தது. செப்பரீனோவின் ஆசியர்களாகவும், பொறுப்பாளர்களாகவும் பணியாற்றியவர்கள், தனக்கென ஒரு வாழ்வுமுறையை வகுத்துக்கொண்டு அதன்படி வாழ்ந்து வருகிற அசாத்தியமான கட்டுப்பாடு இருந்தவராக இவர் வாழ்ந்தார் என குறிப்பிட்டுள்ளனர். மறைக்கல்வி என்றாலும் மரியன்னையின் பக்தி என்றாலும் இவரே முதன்மையாக இருந்தார்.

**சலேசியப் பணியில் முளைத்த அழைப்பு:** மரியன்னையின் படம் ஒன்றும் தோமினிக் சாவியோவின் படம் ஒன்றும் எப்போதுமே தன் மேசையின்மீது வைத்திருப்பார். சலேசிய ஆயராக இருந்த பேரருட்திரு கலியேரோ அவர்களையும் தன் பகுதியில் பணிபுரிந்த சலேசிய குரு அருட்திரு. மிலனேசியோ அவர்களையும் பார்த்துத் தானும் சலேசிய குருவாக வேண்டும் என்று முடிவெடுத்தார். தன் பழங்குடி மக்களுக்கு இறைப்பணி செய்து நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்றத் தணியாத்தாகம் அவரில் ஊற்றெடுத்தது. நான்கு வருடங்கள் படித்து முடித்தவரின் உடல் நலம் குன்றியது. இதனால் தன் சொந்த பகுதியிலேயே தன் குருத்துவக் கல்வியைத் தொடர அனுப்பி வைக்கப்பட்டார். மெல்ல இவரை தாக்கிக் கொண்டிருந்த காசநோயின் காரணமாக இத்தாலிக்கு அனுப்பப்பட்டார்.

**இன்னுமொரு தோமினிக் சாவியோ:** செப்பரீனோவின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வந்தது. பல அன்பு மாணவர்கள், அன்பு உள்ளங்கள் சூழ்ந்து நிற்க தன் ஆன்மாவை இறைப்பதம் கையளித்தார் செப்பரீனோ. சலேசிய பள்ளியில் நுழைந்த நாள் முதலே தோமினிக் சாவியோவின் வாழ்வை அறிந்து தெளிந்து அவரையே தன் வாழ்வின் முன்மாதிரியாய்க் கொண்டு வாழ்ந்தவர் செப்பரீனோ.

இவரின் வாழ்க்கை முறையைக் கண்டு பலரும் "புனித அலோசியஸ் ஞானப்பிரகாசியார் மீண்டும் உயிர்பெற்று வந்ததுபோன்று உள்ளது" என்றும் "இன்னுமொரு தோமினிக் சாவியோ" என்றும் பேசினார்கள். தோமினிக் சாவியோ 15 வயதுகூட நிரம்பாத சிறுவன்.

அவன் எப்படி இளையோர்களுக்கு முன்மாதிரியாய் இருக்கமுடியும் என்று தவறான காரணம் கற்பிக்கும் சிலருக்கு செப்பரீனோவின் வாழ்வு ஒரு சவால்... ஒரு சவுக்கடி... தோமினிக் சாவியோவை தன் முன் மாதிரியாய் கொண்டது மட்டுமல்ல, தானே ஒரு மாபெரும் முன்மாதிரியாய் வாழ்ந்து 19வயதிலும் இறைவனுக்கேற்ற வாழ்வு வாழ முடியும் என்று காட்டியுள்ள செப்பரீனோ நமுங்க்குராவிற்கு திருஅவை அருளாளர் நிலையை வழங்கியுள்ளது. கத்தோலிக்க இளையோர்களின் வாழ்வுக்கு இன்னுமொரு அரும் பெரும் முன்மாதிரி கிடைத்துள்ளது என்றால் அது மிகையாகாது.



# புனித மோனிக்கா

## தந்த
## புனித அகுஸ்தினார்

*திருமதி. டிலைலா சேவியர்*

புனித மோனிக்கம்மாள் தன்னுடைய குடும்பத்தில் தன் கணவன் கடுமையான கோபம் உள்ளவராக இருந்தபோதிலும் எதிர்வாதமாக நடந்துக்கொள்ளாமல் பொறுமையோடும், தாழ்ச்சியோடும், செபத்தினாலும் தன் கணவரை கவனித்ததால் தன் கணவனின் பிறவி குணங்களை மாற்றும் ஆற்றலை பெற்றிருந்தாள். தன் கணவர் இறப்பிற்கு முன் திருமுழுக்குப் பெற்று திருச்சபையின் மகனாக மாற்றும் வல்லமையையும் பெற்றிருந்தார். எனவே குடும்ப பெண்களுக்கு குடும்பத்தையும், குடும்ப அங்கத்தினர்களையும் ஆக்கப்பூர்வமாக இறைவழியில் நடத்தவும் நல்ல வாழ்க்கை வாழவும் அன்பு, பொறுமை, தியாகம் போன்ற எடுத்துக்காட்டான வாழ்க்கை வாழ்ந்தார். முக்கியமாக இறைப்பற்று, ஆழ்ந்த விசுவாசம், இடைவிடாமல் செபித்தல் போன்ற பண்புகளை நாம் பெற்றிருக்க வேண்டுமென்ற பாடத்தை இப்புனிதை மோனிக்காவிடம் கற்றுக்கொள்வோம்.

மேலும் இன்றைய காலக்கட்டத்தில் இளைஞர், இளம் பெண்களை நல்ல நெறியில் வளர்க்க துடிக்கும் பெற்றோர்களுக்கு இவர் ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. ஓராண்டு, இரண்டாண்டு அல்ல தன்னுடைய மகனின் புனித வாழ்விற்காக மகனின் 32வது வயதுவரை இடைவிடாமல் கண்ணீரோடு இறைவனிடம் மன்றாடி கேட்கும் நம்பிக்கையான விடாமுயற்சியை நாம் கற்றுக்கொள்ள இவரது வாழ்க்கை நமக்கு கற்பிக்கிறது. இதுமட்டுமல்லாமல் புனித மோனிக்கம்மாள் தன்னுடைய மகனின் ஆடம்பர வாழ்க்கை ஆன்மாவிற்கும், அதனால் இறைவனிடமிருந்தும், இறை அன்பிலிருந்தும் விலகியிருப்பதை விரும்பவில்லை. எனவே தன் மகனுக்காக செபிக்கும்படியும்,

நல்வழியை காட்டும்படியும் துறவற மக்களின் உதவியை நாடி செல்கிறார். எனவே பெற்றோர்களாகிய நாமும் நம்முடைய பிள்ளைகளுக்காக பிறரின் செபமும், குருக்கள், கன்னியர்களின், ஆலோசனைகள் மிகவும் அவசியம் என்பதையும் தன்னுடைய வாழ்வின் மூலமாக நமக்கு கற்றுத்தருகிறார். தூய மோனிக்கம்மாள் தன் மகனை நல்வழிபடுத்துவதற்காக இறைவனையும், அன்னை மரியாளையும் உறுதியாக பற்றிக் கொண்டாள். உருக்கமான மன்றாட்டுக்களால் இவர்களின் உதவியையும், அருளையும் பெற்று தன் குடும்பத்திலுள்ள தன் கணவர், மாமியார் முக்கியமாக தன் மகனை ஆயர் அளவிற்கு உயர்த்தினார். எனவே பெற்றோர்களாகிய நாமும் நாம் எந்த நிலையில் இருந்தாலும் ஏழை, பணக்காரர், படித்தவர், படிக்காதவர் நம்முடைய பிள்ளைகளையும் குடும்ப அங்கத்தினரையும் தூய்மையான இறைவனுக்கு பிரியமான வாழ்க்கையை வாழ கற்றுக்கொடுக்கவும், பிள்ளைகள் தடுமாறும்போது எத்தனை காலமானாலும் செபிக்க வேண்டுமென்றும், நல்லதொரு எடுத்துக்காட்டான வாழ்க்கையை வாழ வேண்டுமென்ற பாடங்களையும், பிள்ளைகளுக்கு உடலைவிட ஆன்மா முக்கியமானதென்றும், ஆன்மா இறைவனுக்கு சொந்தம் என்ற உண்மையையும் தன் மகன் அகுஸ்தீன் வழியாக எப்படி தன் மகனின் ஆன்மாவை சாத்தானுக்கு சொந்தமாக்காமல் பாதுகாத்தாரோ அவ்வாறே நாமும் பாதுகாக்க வேண்டுமென்ற பாடத்தையும் நமக்கு கற்றுத் தருகிறாள்.

### தூய அகுஸ்தினார் நமக்கு தரும் பாடங்கள்

- உன் வாழ்க்கையில் நீ புரியும் செயல்களுக்கு நீயே முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும், நீ புரியும் செயல்களுக்கு அலகையோ, அடுத்தவர்களோ பொறுப்பல்ல. எனவே கண்ணியமாக நடந்து உமது ஆன்மாவை இறை உதவியுடன் மீட்டுக்கொள் என்பதே தூய அகுஸ்தின் உலக மக்களுக்குக் கற்றுத்தரும் பாடம். மேலும் உமது கைவேலையாகிய அழகிய படைப்புகளிடமே என் மனதை பறிக்கொடுத்தேன். "நீர் என்னுள் இருக்க நான் உம்மோடு இல்லாதிருந்தேன் நீர் என்னை அழைத்தீர் என் செவிகளைத் துளைத்தது உமது பேரொளி என் இருள் நிறைந்த கண்களுக்கு ஒளி கொடுத்தது. நீர் தந்த அன்பிற்கும் அமைதிக்கும் உம்மில் உருகி நிற்கிறேன்" என்று கூறிய இளைய சமுதாயத்தினரை தகுந்த நேரத்தில் இறை அழைத்தலை உணர நமக்கு பாடம் கற்றுத்தருகிறார்.

- தேவையில்லாத தப்பறையான புத்தகங்களை படிப்பதைவிட வேதாகம புத்தகங்களை படிக்கும்போது இறைவனின் விருப்பத்தை புரிந்துக்கொள்வோம் என்றும், நாம் வழிதவறி செல்லும்போது, நம்மைவிட பெரியவர் வாழ்வில் அனுபவம் உள்ளவர்கள், துறவறத்தார் போன்றவர்களின் ஆலோசனைகளைக் கேட்க வேண்டுமென்ற பாடத்தை கற்றுத்தருகிறார். கற்பு என்னும் புண்ணியத்தை இருபாலரும் கடைபிடிக்க வேண்டுமென்றும் தாயின் மென்மையான உள்ளத்தையும், தாயின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டுமென்றும், தாயின் செபங்கள், கண்ணீர், ஆலோசனைகள் என்றும் பிள்ளைகளின் நல்வாழ்விற்காக எண்ணங்களையும் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று பாடத்தையும் கற்றுத் தருகிறார்.



# புனித திருமுழுக்கு யோவான்

## நேர்மை தவறாத போராளி

*திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

திருஅவையில் அன்னைமரியாவுக்கு அடுத்தபடியாக இரு திருவிழாக்களைக் கொண்டாடும் தகுதிபெற்றவராகக் கருதப்படுபவர் புனித திருமுழுக்கு யோவான். முதலாவது திருவிழா ஜூன் 24ம் நாள் பிறந்தநாளும் இரண்டாவது ஆகஸ்ட் 29ம் நாள் தலைவெட்டப்பட்ட நாள். செக்கரியாவுக்கும், எலிசபெத்துக்கும் அவர்களது முதிர்வயதில் திருமுழுக்கு யோவான் பிறந்தார். இவர் பிறக்கும் முன்பே முன்னறிவிக்கப்பட்டவராகவும், இயேசுவின் தாயால் வாழ்த்தப்பட்டவராகவும் இருந்தது இவரது எதிர்காலச் சிறப்பை உணர்த்தும் விதத்தில் அமைந்தது. இவரது வாழ்வைவிட பணியே எல்லாருக்கும் வெளிப்படையாகத் தெரிந்தது. இவர்தம் சீடர்களுக்கு இறைவேண்டல் செய்யக் கற்பித்திருந்தார். அவர்கள் வேண்டல் செய்ததைப் பார்த்த இயேசுவின் சீடர்கள் இயேசுவிடம் யோவான் தம் சீடர்களுக்கு இறைவேண்டல் செய்யக் கற்றுக் கொடுத்ததுபோல எங்களுக்கும் கற்றுக்கொடும் (லூக் 11:1-2) என்றனர்.

இதுவே உலகப் புகழ் பெற்ற அப்பா அனுபவத்தை எல்லாருக்கும் அள்ளிக்கொடுக்கக் கூடிய அற்புத இறைவேண்டலான இயேசு கற்பித்த மன்றாட்டு உருவாகக் காரணமாக அமைந்தது. இயேசுவின் பணி கருதப்படும் வாழ்வின் இயேசுவின் திருமுழுக்கின் செயல் வீரராகத் திருமுழுக்கு யோவான்

கருதப்படுகிறார். விளைவு இன்னதெனத் தெரிந்தும் இறைவனின் குரலாக நின்று மக்களுக்கு நீதியை எடுத்துரைத்தும், அநீதியைக் கண்டித்தும் கடமை ஆற்றியவர்கள்தான் இறைவாக்கினர்கள். அவர்களில் ஒருவராகத் திருமுழுக்கு யோவானும் கருதப்பட்டார். இவர் பழைய ஏற்பாட்டு நிறைவாகவும், புதிய ஏற்பாட்டின் தொடக்கமாகவும் இணைக்கும் வகையாக இணையற்ற இறைவாக்கினர் என்றால் அது மிகையாகாது.

இயேசு கிறிஸ்துவின் முன்னோடியாக போற்றப்படுபவர் திருமுழுக்கு யோவான். இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்தி திருமுழுக்கு கொடுத்த பெருமை இவரையே சாரும். இவர் முற்றும் துறந்த துறவியாக பாலைவனத்தில் வெட்டுக் கிளியையும் காட்டுத் தேனையும் உண்டு விலங்குதோல் அணிந்து புதுவகையான இறைசெய்தி பகிர்ந்தவர். மனந்திரும்பியவர்களுக்கும், திருமுழுக்கு அருட்சாதனம், பெறுபவர்களுக்கும், துறவிகளுக்கும், நெய்வோருக்கும் பாதுகாவலர் ஆவார். யோவான் என்ற பெயருக்கு "அருளளிப்பவராம் யாவே" என்று பொருள். "திருமுழுக்கு" என்கிற அடைமொழி மக்களுக்கு இவர் திருமுழுக்கு கொடுத்த நிமித்தம் கொடுக்கப்பட்டது. இவர் இறைவனின் கொடையாக செக்கரியாவுக்கும் எலிசபெத்துக்கும் அவர்களின் முதிர் வயதில் ஆலய குருவின் சந்நிதியில் பிறந்தவரும் அன்னை மரியாளின் உறவினரும் ஆவார்.

இறைமகன் இயேசுவின் வருகையை முன்னறிவிக்கும் முக்கிய பணி இவரிடமே அளிக்கப்பட்டிருந்தது. இவரைப் பற்றி ஏசாயா மற்றும் மலாக்கு புத்தகங்களில் நானூறு ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டிருந்தது. அனைத்து நற்செய்திகளும் திருத்தூதர் பணி புத்தகமும் இவரை முக்கிய நபராய் மெய்ப்பித்து காட்டுகிறது. இவருடைய பிறப்பைப்பற்றி கூறும்போது இவரின் உன்னத பிறப்பினை நம்பாத காரணத்தால் இவரின் தந்தை செக்கரியா பேச்சிழக்கிறார். செக்கரியாவுக்குதோன்றிய கபிரியேல் தூதர் முதுமையில் குழந்தைப் பேறு சாத்தியப்படும் அற்புதத்தையும் யோவான் என்ற பெயரை முன் தெரிவித்தும் அவரது வாழ்வுப் பணியை வலியுறுத்திய நிகழ்வே திருமுழுக்கு யோவானின் முதன்மை பங்கினை வலியுறுத்துகின்றது.

இச்சம்பவம் முடிந்து ஆறு மாதங்களுக்குபின் கர்ப்பிணிகளான அன்னை மரியாளும் எலிசபெத்தம்மாளும் சந்தித்தபோது மரியாளின் குரல் கேட்ட அக்களிப்பில் துள்ளியவர் திருமுழுக்கு யோவான். இவர் பிறந்தபின் வானதூதர் கூறிய பெயரையே குழந்தைக்கு இடவேண்டி சக்கரியா பலகையில் எழுதிய மறுகணம் நாவின் கட்டவிழ்க்கப்பட்டார். தனது வாலிப வயதில் திருமுழுக்கு யோவான் யோர்தான் நதிக்கரையில் துறவு மேற்கொண்டார். இவர் மக்களை மனமாற்றத்திற்கும் அதன் அடையாளமாக திருமுழுக்கு சடங்கிற்கும் அழைத்தார். இவரின் வாழ்வும் போதனையும் பல்வேறு மக்களை ஈர்த்தது. சிலர் இவரது சீடர்களாகவும் மாறினர். இறைமகன் வருகைபற்றிய போதனையும் மனமாற்றம் பற்றிய அழைப்பும் பரிசேயர்களையும் சதுசேயர்களையும் அரசியல் செல்வந்தர்களையும் மெய்சிலிர்க்கச் செய்தது.

இவருடைய சீடர்கள் இயேசுவின் போதனையில் ஈர்க்கப்பட்டு இயேசுவின் நெருங்கிய சீடர்களாய் மாறினர். ஒருமுறை யோர்தான் நதிக்கரையில் திருமுழுக்கு யோவான் பெருந்திரளான மக்களுக்குத் திருமுழுக்கு கொடுத்துக் கொண்டிருந்தார். அவ்விடம் வந்த பாவமறியா இயேசு தனக்கு திருமுழுக்கு பெறவேண்டியபோது அவருடைய இறைத்தன்மையை நன்கறிந்திருந்ததால் பெரிதும் வியப்புற்றார். கிறிஸ்து திருமுழுக்கு பெற்றபின் யோவானின் பணி நிறைவுபெற்றது. இதன் பின் ஏரோது மன்னரின் தவற்றினை சுட்டிக்காட்டியதால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார் திருமுழுக்கு யோவான். திருமுழுக்கு யோவான் சிறையிலிருந்தபோது இயேசுவின் நற்செய்திப் பணிபற்றி கேள்விப்படுகிறார். அரசியல் நோக்கமேமின்றி அன்பான கனிவான இயேசுவின் பணிபற்றி விளக்கம் தேடினார் இதனால் தமது சீடர்களுள் சிலரை இயேசுதான் உண்மையாக வரப்போகின்ற மெசியாவா? என்று தெரிந்துவர அனுப்பினார். இயேசு அவர்களிடம் தாம் செய்வதையும் போதிப்பதையும் யோவானிடம் கூறும்படி பதிலனுப்பினார். யோவானின் மீது ஏரோதுக்குபயம் இருப்பினும் அவரை நேர்மையானவராகவும் தூய நெஞ்சத்தவராகவும் மெச்சினார். சிறையில் யோவான் போதிப்பதை சிலமுறை கேட்டும் இருக்கிறார். இருப்பினும், அவருடைய பிறந்தநாள் விருந்தின்போது ஏரோதியாளின் மகள் சலோமி கொடுத்த அவசரத்தனமானவாக்கினால் யோவானின் உயிரை விரயமாக்கினார். யோவானின் தலை துண்டிக்கப்பட்டு ஏரோதியாளிடம் கொடுக்கப்பட்டது. தூய ஜெரோம் அவள் யோவானின் தலையை பலகாலமாக வைத்து அவ்வப்பது அவரின் நாக்கினை கத்தியால் குத்தி மகிழ்ந்ததாக கூறுகிறார். மரபின்படி யோவான் சாக்கடல் ஓரமாக இவரின் தலைவெட்டப்பட்டு இவரது உடல் சமாரியாவில் புதைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இயேசுவின் பகழ் எங்கும் பரவுவதைப் பார்த்து ஏரோதுதிருமுழுக்கு யோவான் தான் மீண்டும் உயிர் பெற்று வந்ததாக அச்சமுறுகின்றார். புழைய ஏற்பாட்டு இறைவாக்கினருள் இறுதியானவர் யோவான் புதிய ஏற்பாட்டு கதாபாத்திரங்களில் வித்தியாசமானவர். இவருடைய பணிக்கு மக்கள் மிக அருமையாக பதிலளித்தனர். பல்வேறு மக்களினத்தாரும் இவரது போதனையால் மனம்மாறி மீட்பின் வருகைக்காக ஆயத்தம் செய்துகொண்டனர். இவரது உள்ளீடு எலியா இறைவாக்கினரது பண்புகளைக் கொண்டிருந்தது. எலியாவைப்போல் உள்ளதை உள்ளதுபோல் பேசும் தன்மை கொண்டிருந்தார் யோவான். பிறரைக் கண்டு அச்சமின்றி பேசியவர் ஏரோது மன்னனையும் விட்டு வைக்கவில்லை. இவர் தனித்து நின்றவர் அச்சமின்றி போராடி உண்மையை வலியுறுத்தியவர் திருமுழுக்கு யோவான். யோவான் மக்கள்முன் பணியுரைக்குமுன் பாலைவனத்தில் இருந்தார். இது அவருடைய அரசியல், ஆன்மீக அறநெறி பாலைவன நிலையைக் குறிப்பதாக உள்ளது. மனமாற்றத்திற்கு அழைப்புதரும் போதகரின் வாழ்க்கைத் தரம் இவரிடம் தென்பட்டது. இவர் தாம் மெசியா அல்ல மாறாக வரப்போகின்றவரின் பாதையை ஆயத்தம் செய்பவன் என்பதைத் தெளிவாய் தெரிந்தும் அறிவித்தும் வந்தார். தனது உடைமையிலும் உடையிலும் எளிமையைக் கையாண்டார்.

இயேசு மனிதரில் யோவான் சிறந்தவர் என்று மொழிந்ததில் அவரின் பெருமையும் மகத்துவமும் விளங்கும்.

திருமுழுக்கு யோவான் விசித்திரமான ஒருமித்த சிந்தனை கொண்ட மனிதராய் இருந்தார். தமது பணியென்ன என்பதையறிந்து அதைத் தெளிவுற அரங்கேற்றம் செய்தார். தமது முழு முயற்சியையும் இதற்கென கொடுத்தார். இவருக்கென்று அதிகாரமோ அந்தஸ்தோ ஆதிக்கமோ இல்லையெனினும், அவருடைய போதனையில் அதிகாரமும் ஆணித்தரமும் இருந்தது. அவருடைய வார்த்தையில் இருந்த உண்மையைப் பலரும் உணர்ந்தனர். இதனால் புதுவாழ்வையும் வாழ்வின் உயர்தன்மையையும் அறிந்து மனம்மாறினர். மக்கள் கூட்டம் இவரை நாடிவந்தாலும், இவர் இயேசுவையே முன்னிறுத்தி பேசினார். எனவே உண்மையை நன்குணர்ந்த நேர்மையான போராளி திருமுழுக்கு யோவான் என்பதற்கு மாற்றுக்கருத்து இல்லை.





# திருஅவைச் செய்திகள்

*அருட்சகோ. யோவான் ச.ச*

### செயற்கை நுண்ணறிவு மனிதகுல நலனுக்குச் சேவை செய்யவேண்டும்

09 ஜூலை 2026 ஜெனீவாவில் நடைபெற்ற AI for Good Global Sum அவை மாநாட்டையொட்டி அனுப்பிய செய்தியில், திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், செயற்கை நுண்ணறிவு மனித மாண்பையும் பொதுநலனையும் பாதுகாக்கும் வகையில் பயன்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். தொழில்நுட்ப வளர்ச்சி மனித சுதந்திரத்தையும் நெறிமுறைகளையும் மதிக்கும் வகையில் அமையவேண்டும் என்றும், உலகநாடுகள் பொறுப்புடன் இணைந்து செயல்படவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

### திருத்தந்தையுடன் மதிய உணவு

11 ஜூலை 2026 காஸ்தல் கந்தோல்போவில் நடைபெற்ற "திருத்தந்தையுடன் மதிய உணவு" நிகழ்வில், 35 சிறுவர்கள் உட்பட 200 ஏழை, எளியோர், அகதிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பங்கேற்றனர். திருஅவையின் கருணை, வரவேற்பு மற்றும் சகோதரத்துவத்தை வெளிப்படுத்திய இந்நிகழ்வு, "தேவாலயம் அனைவருக்கும் திறந்த குடும்பம்" என்ற செய்தியை மீண்டும் உறுதிப்படுத்தியது.

## போரின் மத்தியில் அமைதிக்கு திருத்தந்தை அழைப்பு

13 ஜூலை 2026காஸ்தல் கந்தோல்போவில் நடைபெற்ற ஞாயிறு மூவேளை செபஉரையில், மத்திய கிழக்கு, லெபனான் மற்றும் உக்ரைனில் தொடரும் வன்முறைகள் குறித்து திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் கவலை தெரிவித்தார். நீதியான, நீடித்த அமைதிக்குப் பேச்சுவார்த்தை, நேரடி சந்திப்பு மற்றும் தூதரக முயற்சிகளே வழி என வலியுறுத்திய அவர், நம்பிக்கையை இழக்காமல் அமைதிக்காகச் செயல்பட உலக மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

## “பாபேல் கோபுரத்தை அல்ல, ஒன்றிப்பைக் கட்டியெழுப்புங்கள்”

13 ஜூலை 2026 ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பின் (FABC) 12-வது நிறைவிறுதிப் பேரவையையொட்டி, திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், ஒன்றிப்பையும் சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்புமாறு ஆசிய ஆயர்களுக்கு அழைப்பு விடுத்தார். ஏழைகள், நோயாளிகள் மற்றும் புலம்பெயர்ந்தோரை மையமாகக் கொண்ட மனிதநேயச் சமூகத்தை உருவாக்க அனைவரும் துணிவுடன் செயல்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## உக்ரைன் பயணத்தைத் தொடங்கிய திருத்தந்தையின் சிறப்புத் தூதர்

18 ஜூலை 2026 திருத்தந்தையின் சிறப்புத் தூதராக பேராயர் பால் ரிச்சர்டு காலகர் அவர்கள் உக்ரைன் பயணத்தைத் தொடங்கினார். போரால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்த அவர், “நீதியுடனான அமைதியே நிலையான தீர்வு” என்று வலியுறுத்தியதுடன், துயருறும் உக்ரைன் மக்களுக்கு திருத்தந்தையின் நெருக்கத்தையும் செபஉறுதியையும் எடுத்துரைத்தார்.

## ஹவாயில் கத்தோலிக்க மறைப்பணியின் 200ஆம் ஆண்டு யூபிலி தொடக்கம்

ஹவாய் தீவுகளுக்கு முதல் கத்தோலிக்க மறைப்பணியாளர்கள் வந்தடைந்ததன் 200-வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், ஹவாயில் உள்ள திருஅவை ஒரு யூபிலி ஆண்டைத் தொடங்கியுள்ளது. ஹொனொலுலு மறைமாவட்டம் இன்று 66 பங்குகள் மற்றும் 23 ஆலயங்களைக் கொண்டு, மக்கள் வாழும் ஆறு தீவுகளில் உள்ள கத்தோலிக்கர்களுக்குச் சேவை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

## விளிம்புநிலை மக்களுக்கான யுஐஎஸ்ஜி (UISG) சகோதரிகளின் சேவையை பாராட்டிய ராணி கமிலா

UISG எனப்படும் உலகளாவிய பெண் துறவு சபைகளின் தலைவர்கள் அமைப்பின் பிரதிநிதிகள் வத்திக்கானில் இடம்பெற்ற முதல் சந்திப்பைத் தொடர்ந்து மீண்டும் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், உலகின் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்குச் சேவை செய்யும் கத்தோலிக்க அருள்சகோதரிகளின் அர்ப்பணிப்பை ராணி கமிலா பாராட்டினார். மோதல் இடம்பெறும் பகுதிகளிலும், விளிம்புநிலை சமூகங்களிலும் சகோதரிகள் செய்யும் தாழ்மையான மற்றும் தைரியமான சேவையை ராணி மனதாரப் பாராட்டினார்.



# இளமையும் இறைவனும்

*திரு. ச. ஜான்போஸ்கோ*

"ஞானத்தின் இருப்பிடமே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்று தேவ அன்னையிடம் வேண்டிக் கொள்கிறோம். அன்னை மரியாள் ஞானத்தின் இருப்பிடமாகத் திகழ்வதற்கு ஒரே காரணம் அவள் என்றும் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றியது தான். எப்பொழுதும் இறைவனின் விருப்பத்தின்படி வாழ்ந்து வந்தாள். உலகத்தை மீட்க கன்னிமரியாள் இயேசுவை ஈன்றெடுக்க வேண்டும் என்று வான தூதர் வந்து வாழ்த்து கூறியபோது "ஈது எங்ஙனம் ஆகும்? நானோ கணவனை அறியேனே" என்றாள். அதற்கு வான தூதர் "பரிசுத்த ஆவி உம்மீது வருவார். உன்னதரின் வல்லமை உம்மேல் நிழலிடும்". "கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை" என்றார். கன்னி மரியாள் "இதோ ஆண்டவருடைய அடிமை. உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்" என்றாள். (லூாக்.1: 34-38). கன்னி மரியாள் இளமைப் பருவத்திலிருந்தே இறை அனுபவத்தோடு வளர்ந்தது மட்டுமல்லாமல் இறைவனின் விருப்பத்தை தன்னுடைய வாழ்க்கையில் நிறை வேற்றிவந்தாள்.

அன்னை மரியாளுடைய கணவரான புனித யோசேப்பு நம்முடைய கண்களுக்கு ஒரு வயோதிகராக சித்திரம் தீட்டப்பட்டு, காட்டப்பட்டுள்ளார். ஏனெனில், கன்னி மரியாளின் கற்புக்குப் பாதுகாவலராக இறைவன் அவரை நியமித்தார். ஆகவே யோசேப்பு வயோதிகராகத்தான் இருக்க வேண்டுமென்ற தவறான கருத்தை நம் முன்னோர்கள் நம் மூளையில் திணித்து விட்டார்கள். உண்மையிலேயே புனித யோசேப்பு ஒரு இளம் வாலிபன். அவர் தன்னுடைய இளமைப் பருவத்தை இறைவனுக்கு அர்ப்பணம் செய்து நீதியுடனும் நேர்மையுடனும் வாழ்ந்து வந்தார். தனக்கு மண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த

மரியாள் கருவுற்று இருப்பதை அறிந்ததும் அவளைக் காட்டிக் கொடுக்க மனமில்லாதவராய் அவளை மறைவாக விலக்கிவிட வேண்டுமென்று இருந்தார். அப்பொழுது வானதூதர் தோன்றி "யோசேப்பே, தாவீதின் மகனே, உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால் தான்" (மத்.1:20) என்றார். உடனே யோசேப்பு தம் மனைவியை ஏற்றுக் கொண்டார் என நற்செய்தியில் வாசிக்கிறோம். யோசேப்பு தம் இளமைப் பருவத்திலேயே நீதிமானாகவும், தூய்மையுடனும் வாழ்ந்தது இறைவனின் பிரசன்னத்தை தன்னில் உணர்ந்து, இறைவனுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்ததினால்தான்.

இவர்கள் வழியாக உலகை மீட்கப் பிறந்த இயேசு பெருமான் வளர வளர ஞானத்திலும் முதிர்ந்து கடவுளுக்கும் மனிதருக்கும் மேன்மேலும் உகந்தவரானார் (லூக்.2:52) என்று நற்செய்தியில் வாசிக்கிறோம். இறைவன் இளமைப் பருவத்தை ஒரு புனிதமானப் பருவமாக ஒவ்வொரு மனிதருக்கும் கொடுத்துள்ளார். இளமை ஒரு புதுமை. அது இனிமை. இந்த இளமைப் பருவத்தில் ஏற்படும் உணர்ச்சிகளும், வேட்கைகளும், தாபங்களும், ஏக்கங்களும் சிந்தனைகளும் புரியாத புதிராக இருந்தாலும் இது முழுமை பெற்ற மனித வளர்ச்சிக்கு ஒரு முன்னோடியாக அமைந்துள்ளதை எவரும் மறுக்க முடியாது. இந்த இளமைப் பருவத்தில் உடல் உறுப்புகள் முழு வளர்ச்சியடைவது போல் மன வளர்ச்சியும் இந்தப் பருவத்தில் தான் தொடங்குகிறது. உடலும் உள்ளமும் முழு வளர்ச்சி பெற்று மானிட வாழ்க்கை முழுமை பெறத் தொடங்குவதே இந்த இளமைப் பருவத்தில் தான். இதை இயேசுபெருமான் தன்னுடைய வாழ்க்கையின் வழியாக நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். அவரது பன்னிரண்டு வயதில் எருசலேம் தேவாலயத்தில் அவருடைய ஞானத்தைக் கண்டு சட்ட வல்லுனர்களும், சமயப் போதகர்களும் வியப்படைந்தனர். இயேசு பெருமான் முப்பது வயதில் கலிலேயாவில் தன்னுடைய பகிரங்க வாழ்க்கையைத் தொடங்கியபோது "இதெல்லாம் இவருக்கு எங்கிருந்து வந்தது? என்னே இவர் பெற்ற ஞானம்! என்னே இவர் கையால் ஆகும் புதுமைகள்! அவர் தச்சன் அல்லரோ? மரியாளின் மகன்தானே"?(மாற்கு 6:2-3) என்று மக்கள் பலர் வியப்படைந்தனர். சிலர் இவர்மட்டில் இடறல் பட்டனர்.

இன்று, இளைஞர்கள்-இளைஞைகள் இவர்களைப் பார்த்து குழப்ப வாதிகள், சிந்திக்கத் தெரியாதவர்கள்; பருவக்கோளாறு உடையவர்கள்; கடவுள் பக்தி இல்லாதவர்கள் என்று மலைபோல் குறைகளை அவர்கள் மீது சுமத்தி குற்றவாளிகளைப் பார்ப்பது போல் பலர் பார்க்கின்றார்கள். பெரியவர்கள் என்றால் எல்லாம் அறிந்தவர்கள் போலவும்; இறைவனின் ஞானத்தையே குத்தகை எடுத்துக் கொண்டவர்கள் போலவும்; அவர்கள் சொல்லுவதெற்கெல்லாம் "ஆமா சாமி" போட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். இதற்கு மாறாக தங்களுடைய வாழ்க்கையில் இறைபிரசன்னத்தை உணர்ந்து, இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றி அதை இளையோருக்குப் பக்குவமாகக் கற்றுக் கொடுத்திருப்பார்களே-

யானால் இன்று இளைய தலைமுறையினர் மீது சாட்டப்படும் குற்றங்கள் குறைகள் யாவும் அவர்களுடைய வாழ்க்கையில் காணப்படுமா?

இளையோருக்கு வாழ்க்கைப் பற்றிய முழு அறிவும், வாழ்க்கை அனுபவமும் இல்லாதிருக்கலாம். ஆனால் அவர்களுக்கு தங்கள் வாழ்க்கைப் பற்றிய குறிக்கோள், இலட்சியம் இருக்கின்றது. அவர்கள் வாழும் வாழ்க்கையை உணர்வுப் பூர்வமாக வாழ்ந்து புதுப் புது அர்த்தங்களை அனுபவமாகக் கண்டுபிடிக்கிறார்கள். இந்த அனுபவத்தில் இளையோர் தங்களுக்கு ஏற்படும் ஆசை, விருப்பம், இலட்சியத்திற்கும் உள்ள வேறுபாடு என்னவென்று அறியாது திகைக்கின்றார்கள். அவ்வப்போது தோன்றி மறைவது ஆசை. துன்பம் வரும்போது காணாமற்போவது விருப்பம். உடல் பொருள் ஆவியால் காத்து வளர்க்கப்படுவது இலட்சியம். இலட்சியவாதிகள் தான் சாதனையாளர்களாக விளங்க முடியும். இலட்சிய வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்குபவர் இயேசு பெருமான். வாழ்வும் வழியும் வார்த்தையும் நானே என்று கூறிய இயேசு பெருமானின் பாதையில் தொடர்ந்து பயணிப்பதுதான் மிகச் சிறந்த இலட்சியமாகும். இயேசு பெருமான் காட்டிய பாதையில் நம் வாழ்க்கைப் பயணம் தொடர வேண்டுமானால் நம்முள் உரைந்திருக்கும் இறைவனுடைய பிரசன்னத்தை உணர வேண்டும். அதைப் பிறரோடு பகிர்ந்து கொண்டு வாழவேண்டும். இவ்வாறு இறைவனோடு ஒன்றிணைந்து அவருடைய அருள் உயிரில் பங்குபெற்று அன்புறவிலே வளர்ந்து மற்றவர்களுக்கும் இறைவனின் அன்பையும் உண்மையையும் நீதியையும் பறைசாற்ற வேண்டும்.

இளமைப் பருவத்தில் படிக்கின்ற படிப்பும் அது அளிக்கும் அறிவொளியும் வாழ்க்கைக்கு மிகச் சிறந்த பயிற்சிப் பாசறைகளாக அமைய வேண்டும். ஆரோக்கியமான வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் உறவுகளை எப்படி எளிதாக இனம் கண்டு கொள்கிறோமோ, அதைப் போல, தீய உறவுகளையும் இளமைப் பருவத்தில் இனம் காண முடியும். உறவுகளின் வளர்ச்சிக்கும், இனம் காணுதலுக்கும், ஒருவருடைய ஆன்மீக வாழ்வும், ஆண்டவன் மேல் கொண்ட நம்பிக்கையும் மிகவும் உதவி செய்யும். வாழ்வு ஒரு கொண்டாட்டம். இந்த கொண்டாட்டத்திற்கு உறவுகள் துணை நிற்க வேண்டும். நம் உறவுகளின் வழியாகவே நாம் புனிதத்தை அடைகிறோம் என்பதை இளையோருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு முதியோர்களுக்கு உண்டு. இயேசு பெருமானின் வாழ்க்கை என்றோ நடைபெற்று முடிந்த ஒரு வரலாற்று நிகழ்வு மட்டும் அல்ல. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அன்பு உறவிலும் உயிர்த்த ஆண்டவரின் "கிறிஸ்து நிகழ்வு" அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றது. ஒவ்வொரு அன்பு உறவிலும் இறைவன் மனிதராகிறார். இது ஒரு புனித அனுபவம். இந்த புனித அனுபவத்தைப் பெறுவதற்கு வழிநடத்தப்பட வேண்டிய பருவம் தான் இளமைப் பருவம். இளமையும் இறைவனும் இணைந்துவிட்டால் இயேசு பெருமானின் அடிச்சுவட்டில் அநீத அமைப்புக்களை உடைக்கவும், நீதியான அமைப்புக்களைப் படைக்கவும் இயக்கங்களை உருவாக்கவும் இறை ஆற்றல் மிகுந்த இளையோர் சமுதாயத்தைப் படைக்க முடியும். இந்தப் பூவுலகம் என்றும் இளமையாகவே இருக்கும்.

# சுடர் வாசகர் போட்டி 136

## சரியான விடைகள்

1. புனித தோமா இயேசுவிடம் கூறியது
2. "நீதியுள்ளவர் வெற்றிவேந்தரின் வருகையால் மகிழ்ந்துக் களிக்கூறு"
3. அருளாளர் மரிய ரொமேரோ
4. புனித பெனடிக்ட்
5. திருத்தந்தை எட்டாம் ஆசீர்வாதப்பர்
6. புனித பொனவெந்தூர்
7. கார்மெல் மலை புனித கன்னி மரியா
8. புனித மகதலா மரியா
9. கி.பி. 44ம் ஆண்டு
10. புதையல், முத்து, மீன்கள் நிறைந்த வலை
11. அக்டோபர் 2008
12. மார்த்தா, மரியா, லாசர்
13. உங்களுக்கு அமைதி உண்டாகுக
14. புனித லொயோலா இஞ்ஞாசியார்
15. சேன் ஜோஸ் கோஸ்டா ரிக்காவில் சலேசியன் சிற்றாலயம்



### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mrs. Santhosa Mary, Coimbatore
Mr. Lourdusamy, Bangalore
Ms. Edwin Mary, Villupuram

# சுடர்
## வாசகர் போட்டி 137



1. உண்மையான முன்னேற்றத்தின் அளவுகோல்கள் யாவை?
2. புனித அல்போன்ஸ் மரிய லிகோரி எங்கு, எப்பொழுது மறைப்பணியை ஆரம்பித்தார்?
3. புனித மோனிக்கம்மாள் தன் மகனை நல்வழிபடுத்துவதற்காக யாரை நோக்கி மன்றாடினார்?
4. அமைதியின் உருவமாக வாழ்ந்தார் என்று யாரைக் குறிப்பிடுகின்றனர்?
5. கிறிஸ்தவர்கள் அன்னை மரியாவுக்கு எவ்வாறு மரியாதை செலுத்தினார்கள்?
6. புனித பர்த்தலமேயுவின் உடல் எங்கு எவ்வாறு பாதுக்காக்கப்பட்டு வருகிறது?
7. புனித பேதுரு "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்று சொன்னவுடன் என்ன நிகழ்ந்தது?
8. 2008ல் வணக்கத்திற்குரியவர் என அறிவிக்கப்பட்டு 2012ல் அருளாளர் பட்டம் பெற்றவர் யார்?
9. புனித அல்போன்ஸ் மரிய லிகோரி எங்கு ஆயராக திருப்பொழிவு பெற்றார்?
10. குழந்தை வரம் தந்தால் தங்கள் சொத்துக்களை அன்னை கன்னிமரியின் பெயர் விளங்க பயன்படுத்துவதாக நேர்ச்சை வைத்தவர் யார்?
11. திருஅவையானது எந்தாண்டு அன்னை மரியாளின் ஆண்டாகக் கொண்டாடியது?
12. எலியாவைப்போல் உள்ளதை உள்ளதுபோல் பேசும் தன்மை கொண்டிருந்தவர் யார்?
13. திருப்பலியில் கேட்கும் வாசகமும், மறையுரைகளும் வாழ்வு தரும் இறைவார்த்தை நமக்கு என்னவாக உள்ளது?
14. இவ்வுலகில் இருக்கும் தீமைகளுக்கு எதிராகத் துணிந்து போராட நாம் யாருடைய வல்லமையைப் பின்பற்ற வேண்டும்?
15. இயேசு மக்களையும் அவருடைய சீடர்களையும் படகிலேறி செல்லுங்கள் என்று கூறிவிட்டு எங்குச் சென்றார்?

## தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

இறைவார்த்தையை தீபகச் சுடர் மின்னிதழ் வழியாக அனைவருக்கும் எடுத்துரைக்கும் பணியில் எங்களோடு இணைந்து பயணிப்பதற்கு நன்றி. இந்த மின்னிதழை நீங்கள் வாட்சப் மூலம் இலவசமாகப் பெற்று பிறருக்கும் பகிரலாம். இந்த பணிக்கு தன்னார்வ தொண்டர்கள் தங்கள் திறமை, நேரத்தை வழங்கி உதவலாம். முடிந்தவர்கள் நன்கொடையாகவும் தந்து இப்பணியை தாங்கலாம்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண் : 9385201453

# அடுத்த சுடரில்

பகுதி-1

## வழிபாட்டு வழிகாட்டி

கொல்கொத்தா நகர்ப் புனித தெரேசா
ஆண்டின் பொதுக்காலம் 23ம் ஞாயிறு
தூய கன்னிமரியாவின் பிறப்பு திருவிழா
புனித மரியாவின் தூய்மைமிகு பெயர்
ஆண்டின் பொதுக்காலம் 24ம் ஞாயிறு
திருச்சிலுவையின் மகிமை திருவிழா
அன்னை மரியாவின் துயரங்கள்
தூய இராபர்ட் பெல்லார்மின்
ஆண்டின் பொதுக்காலம் 25ம் ஞாயிறு
தூய மத்தேயு-திருத்தூதர், நற்செய்தியாளர் விழா
அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மற்றும் தோழர்கள்
புனிதர்கள் கோஸ்மாஸ், தமியான்
ஆண்டின் பொதுக்காலம் 26ம் ஞாயிறு
முப்பெரும் அதிதூதர்கள் திருவிழா
புனித ஜெரோம்

பகுதி-2

## நம்பிக்கையில் வளர...

அன்னை தெரேசா: புனிதையாகும் தேவதை
தூய மத்தேயு - வாழ்வு தரும் பாடம்
அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மற்றும் தோழர்கள்
திருஅவைச் செய்திகள்

# ஆகஸ்ட் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 01 | ச | புனித அல்போன்ஸ் மரிய லிகோரி | எரே. 26: 11-16, 24 | மத். 14: 1-12 |
| **02** | **ஞா** | **பொதுக்காலத்தின் 18ம் ஞாயிறு** | **I. எசா. 55: 1-3**<br>**II. உரோ. 8: 35, 37-39** | **மத். 14: 13-21** |
| 03 | தி | | எரே. 28: 1-17 | மத். 14: 22-36 |
| 04 | செ | புனித ஜான் மரிய வியான்னி | எரே. 30: 1-2, 12-15, 18-22 | மத். 15: 1-2, 10-14 |
| 05 | பு | புனித மரியாவின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு (பனிமய அன்னை) | எரே. 31: 1-7 | மத். 15: 21-28 |
| 06 | வி | ஆண்டவரின் தோற்றமாற்றம் விழா | **I. தானி. 7: 9-10, 13-14**<br>**II. 2பேதுரு 1: 16-19** | மத். 17: 1-9 |
| 07 | வெ | புனிதர்கள் திருத்தந்தை 2ம் சிக்ஸ்துஸ் மற்றும் புனித கயத்தான் | நாகூ. 1: 15,2:2,1-3,6-7 | மத். 16: 24-28 |
| 08 | ச | புனித தோமினிக் | அப. 1: 12-2:4 | மத். 17: 14-20 |
| **09** | **ஞா** | **பொதுக்காலத்தின் 19ம் ஞாயிறு** | **I. 1அர. 19: 9, 11-13**<br>**II. உரோ. 9: 1-5** | **மத். 14: 22-33** |
| 10 | தி | புனித லாரன்ஸ் திருத்தொண்டர் விழா | 2கொரி. 9: 6-10 | யோவா. 12: 24-26 |
| 11 | செ | புனித கிளாரா | எசே. 2: 8-3:4 | மத். 18: 1-5.10-14 |
| 12 | பு | புனித ஜான் பிரான்செஸ் தெ ஷாந்தால் | எசே. 9: 1-7, 10:18-22 | மத். 18: 15-20 |
| 13 | வி | புனிதர்கள் போன்சியான் மற்றும் இப்போலித்துஸ் | எசே. 12: 1-12 | மத். 18: 21-19:1 |
| 14 | வெ | புனித மாக்சிமிலியன் மரிய கோல்பே | எசே. 16: 1-15, 60,63 | மத். 19: 3-12 |
| 15 | ச | புனித கன்னிமரியாவின் விண்ணேற்பு பெருவிழா (இந்தியாவின் சுதந்திர தினவிழா) | **I. திவெ. 11: 19,12:1-6.10**<br>**II. 1கொரி. 15: 20-26** | லூக். 1: 39-56 |
| **16** | **ஞா** | **பொதுக்காலத்தின் 20ம் ஞாயிறு** | **I. எசா. 56: 1, 6-7**<br>**II. உரோ. 11: 13-15, 29-32** | **மத். 15: 21-28** |
| 17 | தி | | எசே. 24: 15-24 | மத். 19: 16-22 |
| 18 | செ | | எசே. 28: 1-10 | மத். 19: 23-30 |
| 19 | பு | புனித ஜான் யூட்ஸ் | எசே. 34: 1-11 | மத். 20: 1-16 |
| 20 | வி | புனித பெர்னார்டு துறவு | எசே. 36: 23-28 | மத். 22: 1-14 |
| 21 | வெ | புனித பத்தாம் பயஸ் | எசே. 37: 1-14 | மத். 22: 34-40 |
| 22 | ச | அரசியான புனித கன்னி மரியா | எசே. 43: 1-7 | மத். 23: 1-12 |
| **23** | **ஞா** | **பொதுக்காலத்தின் 21ம் ஞாயிறு** | **I. எசா. 22: 19-23**<br>**II. உரோ. 11: 33-36** | **மத். 16: 13-20** |
| 24 | தி | புனித பர்த்தலமேயு திருத்தூதர் விழா | திவெ. 21: 9-14 | யோவா. 1: 45-51 |
| 25 | செ | புனித லூயிஸ் கலசான்ஸ் மற்றும் மரிய ட்ரொங்காத்தி | 2தெச. 2:1-3, 14-17 | மத். 23: 23-26 |
| 26 | பு | புனித செப்பரீனோ நமுங்க்குரா | 2தெச. 3: 6-10, 16-18 | மத். 23: 27-32 |
| 27 | வி | புனித மோனிக்கா கன்னியர் | 1கொரி. 1: 1-9 | மத். 24: 42-51 |
| 28 | வெ | புனித அகுஸ்தின் | 1கொரி. 1: 17-25 | மத். 25: 1-13 |
| 29 | ச | புனித திருமுழுக்கு யோவானின் பாடுகள் | எரே. 1: 17-19 | மாற்கு 6: 17-29 |
| **30** | **ஞா** | **பொதுக்காலத்தின் 22ம் ஞாயிறு** | **I. எரே. 20: 7-9**<br>**II. உரோ. 12: 1-2** | **மத். 16: 21-27** |
| 31 | தி | | 1கொரி. 2: 1-5 | லூக். 4: 16-30 |


DEEPAGAM
proudly presents...
TO SHARE
THE LIGHT
Certificate
of
EXCELLENCE
2 DAYS
Session
PACE
Professional Approach to
Christian Education
Training Teachers to engage in holistic process of Christian Education
Session 1: 18th Aug 2026, Time : 9am to 4pm
PAVE
Professional Approach to
Value Education
Training Teachers for an effective and systematic approach in imparting moral values in children
Session 1: 19th Aug 2026, Time : 9am to 4pm
VENUE : DEEPAGAM - Don Bosco Centre for Faith and Value Education
No.45, Landon's Road, Kilpauk, Chennai-600010
+91 9385201453
deepagamdonbosco


DEEPAGAM DON BOSCO
THE CITADEL
தீபகம்
தீபகம் தொன் போஸ்கோ
நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்,
சென்னை - 600010
ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான
ஒரு நாள் பயிலரங்கம்
நாள்: 2 ஆகஸ்ட் 2026 (ஞாயிறு)
நேரம்: காலை 9 மணி முதல்
மாலை 5 மணி வரை
பயிற்சியாளர்: அருட்பணி ஜேசுதாஸ் ச.ச,
இயக்குனர் - தீபகம்
இடம்: தீபகம், 45 லண்டன்ஸ் ரோடு,
கீழ்ப்பாக்கம், சென்னை - 10
முக்கிய தலைப்புகள்:
1 மறைக்கல்வியில் பிள்ளைகளின் ஆர்வத்தை வளர்க்கும் யுக்திகள்
2 சலேசிய உடனிருப்பு
3 இசை வழி இறை மொழியை பயிற்றுவிப்பது எப்படி?
கட்டணம்: ரூபாய் 150 (மதிய உணவு மற்றும் தேநீர்)
குறிப்பு: தங்கள் பங்கிலிருந்து எத்தனை ஆசிரியர்கள் கலந்து கொள்வார்கள் என்ற விவரத்தை கீழ்காணும் கைபேசி எண்களில் 29.07.26ம் தேதிக்குள் தெரிவிக்கவும். பங்கேற்கும் ஆசிரியர்களுக்கு ஞாயிறுத் திருப்பலி நிறைவேற்றப்படும்.
தொடர்புக்கு: 7338948203, 9943942526
அன்புடன்,
அருட்பணி. ஜேசுதாஸ் ச.ச.
இயக்குனர், தீபகம்




*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
*கணினியேற்றம்* : **கபிரியேல் மேரி** *வடிவமைப்பு* : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
*தயாரிப்பில் மேற்பார்வை* : **ஈசாக், மரிய ஜேம்ஸ், சகோ.யோவான் ச.ச**